பரலோகம் செல்ல எளிதான வழி

(சுவிசேஷம் அறிவிக்கும் முறை)

எஸ். தாயப்பன்

"நீங்கள் உலகமெங்கும் போய்,
சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

\- மாற்கு 16:15

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பரலோகம் செல்ல எளிதான வழி

(புற ஜாதிகளுக்கு சுவிசேஷத்தை
அறிவிக்கும் முறை)

எஸ்.தாயப்பன்

'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும்
சுவிசேஷத்தை அறிவியுங்கள்' - மாற்கு. 16:15

நன்கொடை ரூ.10/-

பரலோகம் செல்ல எளிதான வழி - மே 2014 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி:
எஸ்.தாயப்பன்
12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044 - 2234526. மின்அஞ்சல்: **sakthiprabba@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்:

1 முதல் 15 விசிடி அனுப்ப ரூ.20/-
16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.35/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து **M** சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். அல்லது ஷேர் ஆட்டோவில் ரூ.10/- கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுவார்கள். இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் **K.K.** மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலதுபுற ஜி.டி.நாயுடு தெருவில், இடதுபுறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என **MO** படிவத்தில் அல்லது **EMO** வில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய **MO** க்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன் / செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1. என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்) 3,10,000
2. என் அழுகையும்-ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்) 60,000
3. என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்) 40,000
4. என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு) 10,000
5. என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி) 10,000
6. என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா) 2,000
7. **My Cry & Joyful New Life (English)** 45,000
8. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் 1,05,000
9. பாவத்தின் சம்பளம் நரகம் 85,000
10. இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார் 40,000
11. கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில் 25,000
12. என் ஊழியக்காரனே? 20,000
13. இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்? 40,000
14. சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே! 25,000
15. நீங்களே எனக்கு சாட்சிகள் 10,000
16. உண்மையான கடவுள் யார்? 15,000
17. அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு 15,000
18. இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை? 10,000
19. கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 1 5,000
20. கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 2 5,000
21. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1 10,000
22. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2 10,000
23. கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு? 10,000
24. திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி டாக்டர் கிறிஸ்டோபர் 5,000
25. இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடிவான் 3,000
26. பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1) 5,000
27. பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2) 5,000
28. பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை) 5,000
29. நாலு வேதங்களின் நாயகர் இயேசு 5,000
30. ஓர் அவசர அறைகூவல் 5,000
31. கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும் 5,000

சீடிக்கள்

1. **VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்) 3,10,000
2. **VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்) 40,000
3. **VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி) 25,000
4. **VCD.** எழுந்து கட்டுவோம் (தமிழ்) 15,000
5. **VCD.** முக்திக்கு வழி கிறிஸ்துவமே (தமிழ்) 10,000
6. **VCD.** கதாகாலட்சேபம் (தமிழ்) 10,000

மதிப்புரை

அதி சீக்கிரமாய் சம்பவிக்கப் போகும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு, ஊழியர்கள் முதல் விசுவாசி வரை அனைவரும் செயல்பட ஏற்ற காரியங்களை தெளிந்த எச்சரிப்போடு இந்த புத்தகம் ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளது. பரலோகம் செல்ல வழி எளிதானாலும் ஒரு கிறிஸ்தவன் தன்னை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும் என்றும், இந்தக் கடைசி நாட்களில் ஓர் திரள் கூட்டத்தை தேவனுக்கென்று எப்படி ஆதாயப்படுத்த வேண்டும் என்றும் இப்புத்தகம் தெளிவுபடுத்துகிறது. ஆசிரியர் திரு. தாயப்பன் அவர்கள் எழுதிய அநேக புத்தகங்களில் இது ஒரு மிகச் சிறப்பான புத்தகம் ஆகும். எளிய முறையில் முதலில் தன்னை தகுதிப்படுத்திய பின் ஓர் கிறிஸ்தவன் இந்த மாபெரும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை எப்படி அறிவிக்க வேண்டும் என்றும், ஏற்ற செய்யுள்களையும், அதன் விளக்கங்களையும் நேர்த்தியாய் கூறி தன்னுடைய அனுபவத்தின் வாயிலாக ஆசிரியர் எடுத்துரைத்திருக்கிறார்.

நிச்சயமாக இந்தப் புத்தகம் நம் சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு ஓர் சவால் விடும் புத்தகமாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

கர்த்தர் திரு. தாயப்பன் ஐயா அவர்களைப் பலப்படுத்தி இன்னும் அதிகமான இப்படிப்பட்ட புத்தகங்கள் எழுதி கிறிஸ்தவ சமுதாயத்தின் இந்தக் கடைசி எழுப்புதலின் நாட்களில் அதிக வல்லமையோடு பயன்படுத்துவாராக.

கர்த்தருக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.

சங்கை **ஜி.ஜேக்கப் சைமன்**, M.Th, CLD, D.D. Ph.D.,
நிறுவனர், சர்வதேச நற்செய்தி பல்கலைக் கழகம்,
சென்னை,

முன்னுரை

நாம எல்லோருமே கிறிஸ்துவுக்குள்ள பிற மார்க்கத்திலிருந்து வந்தவங்கதான். இப்போ வந்திருப்போம். இல்லே கொஞ்ச நாளைக்கு முன்னாடி, சில வருஷங்களுக்கு முன்னாடி வந்திருப்போம். இல்லே நம்மோட அப்பா, அம்மா கிறிஸ்துவுக்குள்ளே முதல்ல வந்திருப்பாங்க. நாமளும் அப்படியே கிறிஸ்தவர்களா இருப்போம். எதுக்காக பிற மார்க்கத்திலிருந்து, கிறிஸ்துவுக்குள்ள வந்தோம்? அங்கே கிடைக்காத சந்தோஷம், சமாதானம், நிம்மதி, பிரச்சனைக்குத் தீர்வு, வியாதியிலிருந்து, கஷ்டங்கள், கடன் தொல்லையிலிருந்து ஒரு விடுதலை இங்கே வந்தா கிடைக்கும். இந்த வாழ்க்கை கொஞ்ச வருஷம்தான். இதுக்கு அப்புறம் ஒரு நித்ய வாழ்க்கை இருக்கு. அதை நாம பரலோகத்தில் ஆண்டவரோடு கழிக்கணும், ஆண்டவரோட வருகை முன்னாடியே இருக்குமானால் நாமெல்லாரும் மறு ரூபம் ஆக்கப் படணும்கிறதுக்காகத்தான் நாம கிறிஸ்துவுக்குள்ள வந்தோம்.

பரலோகம் போறதோ, மறு ரூபம் ஆக்கப்படுறதோ, அவ்வளவு லேசான காரியம் இல்லை. அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ வெகு சிலர் மட்டுமே. பரலோகம் போறதுக்கு ஒரு லேசான, சுலபமான, 100% கேரண்ட்டியான ஒரு ரூட் நமக்கு தேவை. அதுக்கு நாம செய்ய வேண்டியது என்ன? யார் பரலோகம் கண்டிப்பாக போவாங்க? **'பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோகத்தில் பிரவேசிப்பான்'**னு நம் ஆண்டவராகிய இயேசு மத். 6:21ல சொல்லிட்டாரு. பிதாவின் சித்தத்தை செய்யணும். பிதாவின் சித்தம் என்ன? **'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்,**

சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்'னு தீமோ 2:4 சொல்லுது. கர்த்தருக்கு நாம ஊழியம் செஞ்சோம்னா நமக்கு பரலோகத்தில் பங்களா இப்பவே ரெடியாகிடும்.

ஆனா இன்னிக்கு நெறையா கிறிஸ்தவர்கள் ஆத்தும பாரம் இன்றி, நிர்விசாரமாக இருக்கிறாங்க. பல வருஷங்களாக சர்ச்சுக்கு வர்றாங்க. ஆனா இதுவரைக்கும் ஒரு புதிய ஆத்துமாவைக் கூட சபைக்கு அழைச்சிட்டு வந்தது கெடையாது. யாருகிட்டேயும் சுவிசேஷத்தை சொல்றது இல்லை. ஆண்டவர் செய்த நன்மைகளை சாட்சியா வெளியில போயி சொல்றது இல்லை. வெறும் பேர்க் கிறிஸ்தவர்களாக, சண்டே கிறிஸ்தவர்களாக, எங்க வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்னு சொல்ற மாதிரி ஞாயிற்றுக் கிழமை 9 மணி சர்வீசுக்கு 10, 10.15க்கு வந்துட்டு போயிடுறாங்க. வருஷக் கணக்கா இதைத்தான் செஞ்சுக்கிட்டு இருக்காங்க. சுவிசேஷத்தை அறிவிக்கணும்னு நினைப்பு இருந்தாலும், அதைச் செய்யுற முறை தெரியலை. நாம எதைச் சொல்லணும், எதை சொல்லக் கூடாது, நாம எப்படி இருக்கணும்கிற விஷயங்களை தெளிவா தெரிஞ்சு, ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களா மாறி, நாம பரலோகத்தை கண்டிப்பா சுதாரித்துக் கொள்ளுகிற பிள்ளைகளா மாறணும். சபைகள் நிரம்பி வழியணும், தேசம் கர்த்தருக்கு சொந்தமாகணும்கிற ஆதங்கத்தில் பிறந்ததுதான் இந்த நூல்.

இது வெறுமே படிப்பதற்காக மாத்திரம் உள்ள நூல் இல்லை. படித்து கண்டிப்பாக செயல்படுத்த வேண்டிய ஒரு நூல். ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரலோக பிரஜையா மாறுவதற்கு வழிகாட்டும் நூல் இது. ஜெபததோடு படியுங்கள். மற்றவர்களுக்கும் வாங்கிக் கொடுங்கள். கர்த்தர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக! கர்த்தரின் பெரிதான கிருபை உங்கள் ஒவ்வொருவரோடும் என்றும் எப்போதும் இருப்பதாக!

அனைவரும் பரலோக பிரஜைகளா மாற வாஞ்சையுள்ள
உங்கள் சகோதரன்
எஸ். தாயப்பன்

சென்னை-73
05.03.2014

பரலோகம் செல்ல எளிதான வழி

(புற ஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)

அனைவருக்கும் நியாயத் தீர்ப்பு உண்டு

சொர்க்கம், நரகம் குறித்து எல்லா மதத்து வேதங்களும் கூறுகின்றன. அதைக் குறித்து யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. மறுபிறவி இருக்கிறது என்று சிலர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை வைத்து பலர் பிழைப்பு நடத்துகின்றனர். மனுஷர்களுக்கு விதிக்கப்பட்டு இருப்பது ஒரே ஒரு பிறவிதான். ஏழு ஏழு ஜென்மம் இருக்கிறது என்பதற்கெல்லாம் எவ்வித ஆதாரமும் கிடையாது. மறுபிறவி உண்டு என்று நம்புகிறவர்களின் மத வேதங்களே அந்த மூட நம்பிக்கையை மிகக் கடுமையாக சாடியிருக்கின்றன.

இந்த பூலோக வாழ்க்கை கொஞ்ச நாட்களுக்குத்தான். அதிகம் போனால் 60, 70 வருஷம். இன்னும் கொஞ்சம் அதிகமானால் 80 வருஷம். அதுக்குப் பிறகு கல்லறைத் தோட்டம்தான். யாரும் தப்பிக்க முடியாது. **'கடைசி எக்காளம் தொனிக்கும் ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாம் எல்லோரும் மறு ரூபம் ஆக்கப்படுவோம். மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். நாமும் மறு ரூபம் ஆக்கப்படுவோம்'** என 1 கொரி 15:51, 52 கூறுகிறது. மரித்தோர் அனைவரும் எழுப்பப்பட்ட பிறகு நியாயத் தீர்ப்பு இருக்கிறது. **'நாம் அனைவரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்'** - ரோமர் 14:10. **'கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயம் தீர்ப்பார். நான் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய பாவங்களை அவர்களிடத்தில் விசாரிப்பேன்.'** யாத்: 32:34. **'அவர்களுடைய**

அக்கிரமங்களை நினைத்து அவர்களின் பாவங்களை விசாரிப்பேன்.' எரே 14:10. **'அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்க பலனை அளிப்பார்'** என்று மத். 16:27 கூறுகிறது. ஒருத்தரும் தப்பிக்க முடியாது. நாம் செய்வது நமக்கே மறந்து போயிருக்கும். ஆனா எல்லாமே ரிக்காா்டு ஆகியிருக்கு. ஆண்டவரோட சந்நிதானத்தில் நிக்கிற சமயத்தில் எல்லாமே வீடியோ மாதிரி நம்ம கண்ணுக்கு முன்னாடி வரும்.

சொர்க்கம் நரகம், கற்பனை கதை அல்ல!

'அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயம் தீர்ப்பார்' என சங்.96:13ல் வேதம் கூறுகிறது. நாம் நீதியோட, நேர்மையோட, உண்மையோட, உத்தமத்தோட நடந்து, பாவம் எதுவும் செய்யாம, நம்மால முடிஞ்ச உதவிகளை எல்லாம் அடுத்தவர்களுக்கு செஞ்சிருந்தோமின்னா, நாம பரலோகம் போவோம். இல்லேன்னா நரகம்தான். எரி நரகம், அக்கினி சூளை, கந்தகக் கடல், இரவும் பகலும் வாதிக்கப்படு வோம். யுக யுகமாக விவாதிக்கப்படுவோம் என்று சத்திய வேதம் கூறுகிறது.

நம்மோட சதை வெந்து கீழே விழுமாம். மறுபடியும் அது தானாவே நம்ம மேலே வந்து ஒட்டிக்குமாம். மறுபடியும் அது எரியுமாம். பெரிய பெரிய புழுக்கள் எல்லாம் நம்மை வாதிக்குமாம். எலும்பைத் துளைச்சுக்கிட்டு அவைகள் உள்ளே போகுமாம். போன புழுக்கள் மறுபடியும் எலும்பைத் துளைச்சுக்கிட்டு வெளியே வருமாம். இப்படி இது தொடர்ந்து நடக்குமாம். நினைச்சுப் பார்க்கவே குலையெல்லாம் நடுங்குது. எக்காரணம் கொண்டும் நாம இந்த இடத்துக்கு போகவே கூடாது. அது சாத்தானுக்கும் அவனோட சேனைகளுக்கும் உரிய இடம். நமக்கு இல்லை.

நம்மோட பாவங்கள்தான் நம்மை அங்கே போக வைக்குது. ஆண்டவருக்கு நம்மை அங்கே அனுப்புறதுக்கு இஷ்டமில்லை. ஆனா வேற வழியில்லாம நம்மை அங்கே அனுப்புகிறார். ரொம்ப மனக்கஷ்டத்தோடதான் அனுப்புவாரு. அவர் நியாயாதிபதி. அவர்

நீதியோட நியாயத் தீர்ப்பு வழங்கியாகணுமே. நாம மனந் திரும்புறதுக்கு ஏகப்பட்ட சந்தர்ப்பத்தை கொடுத்திட்டாரு. நாம மனந்திருந்தாம, அவரோட சித்தத்தை செய்யாம இருந்தா, நம்மோட ஆக்கினையை நாமே சம்பாதிச்சுக்கிடுறோம்.

யாருக்குமே நரகத்துக்கு போறதுக்கு இஷ்டம் கிடையாதுதான். எல்லோருக்குமே பரலோகம்தான் போகணும்கிற ஆசை இருக்கு. ஆனா அதுக்குரியவைகளை நாம செய்யணுமே. பரலோகம் போறதுக்கு இரண்டு வழி இருக்கு. ஒண்ணு ரொம்ப இடுக்கமான நெருக்கமான பாதை. அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ வெகு சிலரே. **'நீதிமானே இரட்சிக்கப் படுவது மிகவும் அரிது'** என்று வேதம் கூறுகிறது. நாம கிறிஸ்தவர் களாக இருக்கிறதுனாலேயோ, ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் கிறிஸ்தவனா பிறந்ததுனாலேயோ, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கிட்டதுனாலேயோ, ரூத்து, எஸ்தர், தெபோராள் என்று பேர் வச்சுக்கிட்டதுனாலேயோ, அந்தோணி, ஃபிரான்சிஸ், ஜார்ஜ்னு பேரு வச்சுக்கிட்டதுனாலேயோ நாம கிறிஸ்தவங்க ஆகிவிட முடியாது. நாம பரலோகம் போகப் போறது இல்லை.

இதுவரை நாம செய்த பாவங்களை எல்லாம் அறிக்கை செய்து, அதுக்காக மனங்கசந்து அழுது இயேசுவின் இரத்தத்தால கழுவப்பட்டு, முழுகி ஞானஸ்நானம் எடுத்துக்கிட்டதுனால மட்டும் நாம பரலோகம் போயிட முடியாது. வாரா வாரம் சர்ச்சுக்கு தவறாம வர்றதுனாலேயோ, அனுதினமும் பைபிளை படிக்கிறது னாலேயோ, தசம பாகம், காணிக்கை ஒழுங்கா கர்த்தருக்கு கொடுக்கிறதுனாலேயோ, அபிஷேகம் பெற்றதுனாலேயோ நாம பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியாது. அந்நியபாஷை பேசுகிறவரம் பெற்றதுனாலே, உங்களேட ஜெபத்தினாலே பிசாசுகளை துரத்தின்தினாலேயோ, நோய்களைக் குணப் படுத்தியதினாலேயோ, நாம பரலோக பிரஜைகளாக மாறிட முடியாது. நம்மளை யாருன்னே தெரியாதுன்னு ஆண்டவர் சொல்லிடுவாரு. **'அவர்கள் என்னை நோக்கி கூப்பிடுவார்கள். நான்**

மறு உத்தரவு தர மாட்டேன்'னு நீதி 1:28 சொல்கிறதே.

ஜெயம் கொள்ளுகிறவனுக்கே வெண் வஸ்திரம்

'மரண பரியந்தம் உண்மையாக இரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்கு நான் தருவேன்'னு ஆண்டவர் சொல்றாரு (வெளி 2:10) **'ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புத்தகத்திலிருந்து அவனுடைய பெயரை நான் கிறுக்கிப் போடாமல் பிதாவின் முன்பாக அவனுடைய நாமத்தை நான் அறிக்கை செய்வேன்'**னு வெளி 3:5ல வேதம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டது. பாவங்களை அறிக்கை செய்து முழுகி ஞானஸ்நானம் எடுக்கிறது எல்லாம் கிறிஸ்துவுக்குள்ளாற நாம எடுத்து வைக்கிற முதல் ஸ்டெப்பு. பரலோகம் போறதுக்கு நாம கடந்து வர வேண்டிய பாதை இன்னும் ரொம்ப தூரம் இருக்கு. அதையெல்லாம் தாண்டி, கடைசி வரைக்கும், மரண பரியந்தம் உண்மையா இருந்தாலும் பரலோகம் போறது அவ்வளவு லேசான காரியம் இல்லை.

பாவங்களை மன்னிக்கிறவர்கள்தான் கர்த்தர். ஆனால்...

நாம கிறிஸ்துவுக்குள்ளே வர்றதுக்கு முன்னாடி எப்பேர்ப்பட்ட கொடிய பாவங்களைச் செய்து இருந்தாலும், அவைகளுக்காக நாம் மனங் கசந்து அழுது 'ஆண்டவரே உம்முடைய பரிசுத்தமான இரத்தத்தினால என் பாவங்களைக் கழுவி என்னைச் சுத்திகரியுமப்பா'ன்னு நாம கண்ணீர் விட்டு கதறினா, இயேசு கிறிஸ்து நாம அதுவரைக்கும் செஞ்சிருக்கிற எல்லா பாவத்தையும் மன்னிச்சிடுவாரு. ஆனா நாம கிறிஸ்துவுக்குள்ள வந்தப் பிறகு, சத்தியத்தை அறிஞ்சப் பிறகு, நன்மை எது, தீமை எது, பாவம் எதுன்னு தெரிஞ்சப் பிறகு மறுபடியும் நாம பாவம் பண்ணினோம்னா நமக்கு மன்னிப்பே கிடையாதுன்னு வேதம் சொல்றது. **'சத்தியத்தை அறிகின்ற அறிவை அடைந்த பின்பு, நாம மனப்பூர்வமா பாவம் செய்கின்றவர்களாக இருந்தால் அந்தப் பாவங்களின் நிமித்தம் நாம் செலுத்தக் கூடிய வேறு ஒரு பலியும் இராமல், நியாயத் தீர்ப்பும், விரோதிகளைப் பட்சிக்கின்ற கோபாக்கினையும் நம் மீது வரும். மோசேயின் நியாயப் பிரமாணத்தைத்**

தள்ளுகின்றவன் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாவான்' என்று எபி 10:24, 25 சொல்லுது: **'இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே இந்த உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பியவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்குண்டு அவைகளால் ஜெயிக்கப்பட்டால் அவர்களோடே பின் நிலைமை முன் நிலைமையைக் காட்டிலும் மிகவும் கேடுள்ளதாக இருக்கும்'**னு 2 பேது 2:21 சொல்லுதே.

எல்லாப் பாடத்திலேயும் பாஸ் மார்க் வாங்கினால்தானே அடுத்த கிளாஸ்!

'ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதும் கைக் கொண்டிருந்தும் ஒன்றே ஒன்றில் தவறினாலும் அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியாக இருப்பான்'னு யாக் 2:10 சொல்லுது. ஒரு ஸ்டூடண்ட் எல்லாப் பாடத்திலேயும் 90 மார்க் வாங்கிட்டு, கணக்குல மாத்திரம் 10 மார்க் வாங்கினான்னா, அவன் பாஸ் பண்ணி அடுத்த கிளாஸுக்குப் போக முடியுமா? முடியாது இல்லையா? அதுபோலத்தான் இதுவும். **'கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றையும் மீறி நாம் செய்யத் தகாததைச் செய்தால் நாம் பாவத்திற்கு உட்பட்டு குற்றவாளிகளாய் இருப்போம்'**னு லேவி 4:13 சொல்லுதே. நான் இவ்வளவு நாள் நீதியோட நேர்மையோட, உண்மையோடே, உத்தமத்தோடே நடந்திருக்கேனே எனக்கு மன்னிப்பு கிடையாதா? நத்திங் டூயிங்! **'நீதிமான் பாவம் செய்கின்ற நாளிலே அவன் தன் நீதியினால் பிழைப்பது இல்லை'** என்று எசேக்கியல் 18:24லில் சொல்லப்பட்டு இருக்கு. இதுவரைக்கும் நாம செஞ்ச நீதி நம்மைக் காப்பாத்தாது. மரண பரியந்தம், கடைசி மூச்சு வரைக்கும் எப்படி இருந்தே? அதுதான் இங்கே முக்கியம்.

நிறையப் பேரு விழுந்து போயிட்டாங்க. சின்னச் சின்ன தப்புகளுக்கு, தம்மாத்துண்டு பாவத்துக்காக, ஒரு சின்ன மீறுதல், கீழ்படியாமைக்காக பெரிய பெரிய ஜாம்பவான்கள் எல்லாமே விழுந்து போயிட்டாங்க. வேதத்திலே பாக்கும்போது ஆச்சரியமாக இருக்குது. தேவனால் பெயர் சொல்லி அழைக்கப்பட்டவங்க விழுந்து போயிட்டாங்க. அவரால் முன் குறிக்கப்பட்டவர்கள், அபிஷேகம் பெற்றவர்கள், விசேஷித்த விதமாக அழைக்கப்

பட்டவர்கள், தாயின் கருவில் உருவாவதற்கு முன்பாகவே முன் குறிக்கப்பட்டவர்கள் விழுந்து போயிருக்காங்க. படிக்கும் போது பகீர்னு இருக்குது. வேதத்திலே திருஷ்டாந்தமா இப்படி நிறைய விஷயங்கள் இருக்குது. படிக்கப் படிக்க கைகால் எல்லாமே நடுங்குது.

கர்த்தர் மோசேயைத் தெரிந்து கொண்டார். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்குத் தத்தம் பண்ணின கானான் தேசத்துக்கு அழைச்சிட்டுப் போறதுக்காக விசேஷித்த விதமாக முன் குறிக்கப்பட்டவர் மோசே, 40 நாட்கள் சீனாய் மலையிலே கர்த்தர் மோசேயோடே முகமுகமாகப் பேசுகிறார். யாருக்குமே கிடைக்காத பெரிய பாக்கியம் மோசேக்கு கிடைத்தது. செங்கடலைப் பிளக்கிறதுலேர்ந்து, யோர்தானைப் பிளக்குறது வரைக்கும், பார்வோனிடமிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க ஒண்ணு மாத்தி ஒண்ணா பத்து வாதைகளை ஆண்டவர் மோசேயைக் கொண்டுதான் செஞ்சாரு.

ஆண்டவரே மோசேயைக் குறித்து சாட்சி செல்றாரு. **'என் தாசனாகிய மோசே, அவன் என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன். நான் அவனோடு சொப்பனத்தின் மூலமாக அல்ல. தரிசனத்தின் மூலமாக முக முகமாகப் பேசுறேன்'**னு ஆண்டவர் எண் 12:7ல் அவரே நற்சாட்சி கொடுக்கிறாரு. தன்னோட கைப்படவே பத்துக் கட்டளைகளையும் பொறித்து மோசேகிட்டே கொடுக்கிறாரு.

மோசே பிறந்த உடனேயே அவர் உயிரைக் காப்பாற்றி பார்வோனின் மகளிடமே அரண்மனையில் வளரும்படியாக வழி வாசல்களைத் திறந்தார். அடிமைத்தனத்தில் இருந்த ஒரு இஸ்ரவேலனை ஒரு ரோமப் போர்ச் சேவகன், கொடுமைப்படுத்தியதைக் கண்டு அவனை அந்த இடத்திலேயே ஆத்திரம் கொண்டு கொன்று போடுகிறார்.

ஆனால் குற்றம் அவர் மேல் வராதபடிக்கு அங்கிருந்து தப்பிச் செல்லவும் கர்த்தர் வழிகளைத் திறந்தார். இப்படி ஆண்டவர் மோசேயை விசேஷித்த விதமாக தெரிந்து கொண்டு ஏற்ற

வேளையில் அவரை இஸ்ரவேல் ஜனங்களை மீட்க அனுப்பினார். இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு கானான் தேசத்துக்கு அழைத்துச் செல்வதற்காக அழைக்கப்பட்ட மோசே கடைசியில் அவர் கானான் தேசத்தில் கால் வைக்கவில்லை. ஒரே ஒரு சின்ன தப்பு செய்துவிட்டார்.

ஆண்டவர் செய்த அற்புதங்களை கண்ணாரக் கண்டவர்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் செய்த அனைத்துக் காரியங்களையும் கண்ணாரக் கண்டவர்கள். 40 வருஷம் வனாந்திரத்தில் வழி நடத்தப்பட்டனர். பகலில் மேக ஸ்தம்பமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்து அவர்களை கண்ணின் மணியைப் போல காத்து வழி நடத்தி வந்தார். 40 வருஷம் அவர்கள் உழவும் இல்லை, விதைக்கவும் இல்லை, அறுக்கவும் இல்லை. ஆனால் ஆண்டவர் அவர்களைப் போஷித்தார். அதுவும் தேவ தூதர்களின் உணவான மன்னாவைக் கொண்டு போஷித்தார். மாராவின் கசந்த நீரை மதுரமாகவும் மாற்றித் தந்தார். செங்கடலையும், யோர்தான் நதியையும் இரண்டாகப் பிளந்து அதன் ஊடே அவர்களை நடக்க வைத்தார். அதே பாதையில் அவர்களை விரட்டி வந்த பார்வோனின் சேனைகளை செங்கடலை இரண்டாகப் பிளந்து குவியலாக நின்றிருந்த இரண்டு நீர்ச் சுவர்களையும் அப்படியே மூட வைத்து அனைவரையும் இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகவே ஜல சமாதியாக்கினார். 40 ஆண்டுகள் அவர்கள் போட்டிருந்த சட்டை, துணிமணிகள் கிழியவில்லை. சிறிதாகப் போகவில்லை. அவர்கள் அணிந்திருந்த செருப்பு தேயவில்லை. மாமிசம் தின்ன வேண்டும் என்று வேட்கை கொண்டு கேட்ட சமயத்திலே ஒரு பலத்த காற்றின் மூலமாக எண்ணி மாளாத காடைகளைக் கொண்டு வந்து அவர்களின் காலடியிலே போட்டார். இப்படி கர்த்தர் செய்த அற்புதங்களுக்கு அளவே இல்லை. ஒரு பெற்ற தாய், தந்தை தன் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது போல தேவைகளை எல்லாம் சந்தித்தார்.

நன்றி மறந்து முணுமுணுப்புகள்

இத்தனை அற்புதங்களையும் நேரில் கண்டு அனுபவித்த ஜனங்கள் சகலத்தையும் மறந்து தேவனைக் குறித்து முணுமுணுத்தார்கள். மோசேயையும் குறை கூறி அவரின் மனதைப் புண்படுத்தினர். நாங்க அடிமைத்தனத்தில் எகிப்தில் இருக்கின்ற வரையும் வேளா வேளைக்கு எங்களுக்கு சோறு கிடைத்தது. குடிக்க தண்ணீர் கிடைத்தது. இப்போ குடிக்கக் கூட தண்ணீர் இல்லையே என்று மோசேயை பிய்த்துப் பிடுங்கினார்கள். மோசே நொந்து போயி ஆண்டவரிடம் முறையிட்டார். 'ஆண்டவரே! இதுகளை வச்சுக்கிட்டு நான் என்ன பண்ண? என்ன செய்தாலும் இதுகளுக்கு திருப்தி இல்லையே!' எனப் புலம்புகிறார். கர்த்தர் மோசேயிடம் 'நீ ஏன் கவலைப்படுகிறாய்? அந்த மலையிடம் பேசு. தண்ணீர் வரும்' என்றார். இஸ்ரவேலர்கள் படுத்தின பாடுகளினால் ஆத்திரம் கொண்டு கம்பைத் தூக்கி மலை மேல் அடித்தார் மோசே. ஆண்டவர் கூறியதுபோல உடனே தண்ணீர் வந்தது. ஆனால் கர்த்தர் கேட்டார். 'மோசே, நான் உன்னிடம் சொன்னது என்ன? நீ செய்தது என்ன? என்று கேட்டார். அந்த மலையிடம் பேசு என்று மட்டும்தான் நான் சொன்னேன். ஏன் கம்பினால் அடித்தாய்? நீ கானான் தேசத்தில் கால் வைக்க மாட்டாய். உன் கால்கள் கானான் தேசத்தில் பதியாது. இங்கிருந்தே கானான் தேசத்தைப் பார்த்துக் கொள்' என்று கூறிவிட்டார்.

மோசே மோசம் போனார்

யாரிடம் கர்த்தர் கூறினார்? மோசேயிடம்! இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு கானான் தேசத்துக்கு அழைத்துக் கொண்டு போவதற்காக விசேஷித்த விதமாக அழைக்கப்பட்ட மோசேக்கு இந்த கதி! 40 நாட்கள் சீனாய் மலையில் கர்த்தர் முகமுகமாகப் பேசிய அந்த தேவ மனுஷருக்கு இந்த கதி. செங்கடலைப் பிளக்கிறது முதல் பத்து வாதைகளையும் செய்த அந்த ஜாம்பவானுக்கு இந்த கதி! 'என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்' என்று தேவனிடமே நற்சாட்சி பெற்ற

தேவனால் முன் குறிக்கப்பட்ட அந்த தேவதாசனுக்கு இந்த கதி அப்படி என்னப்பா பெரிய தப்பு பண்ணிட்டார்?

சின்னத் தப்பேயானாலும் தப்பு தப்புதான்!

ஆசரிப்புக் கூடாரத்தை அடித்து விட்டாரா? உடன்படிக்கைப் பெட்டியை எட்டி உதைத்து விட்டாரா? பிரதான ஆசாரியனை அடித்து விட்டாரா? இல்லை ஆசாரியனின் மனைவியின் கையைப் பிடித்து இழுத்து விட்டாரா? அப்படி என்னப்பா பெரிய தப்பு செய்து விட்டார்? கல்லு, மண்ணு, பாறை, மலை அதைக் கம்பால் அடித்ததற்கு ஆண்டவர் கேட்டார், நான் சொன்னது என்ன? நீ செய்தது என்ன? அந்த மலையிடம் பேசு என்று மட்டும்தானே கூறினேன். கம்பை எடுத்து அடிக்கச் சொன்னேனா? இல்லையே! என் கட்டளைக்கு அப்படி நீ கீழ்படியாததால் நீ கானான் தேசத்தில் கால் வைக்க மாட்டாய் என்று கூறிவிட்டார். ஒரு சின்ன தப்புக்கு ஆண்டவர் கொடுத்த தண்டனை இது.

இப்போ சொல்லுங்க... நீங்க ஆண்டவரோட எல்லா கட்டளைகளுக்கும் முழுமையாக கீழ்படிகிறீர்களா? இல்லை. உங்க வசதி, இஷ்டத்துக்கு, ஏற்ப கொஞ்சம் அதை மாத்தி செய்யுறீங்களா? செக் பண்ணிப் பாருங்க. சுய பரிசோதனை செய்து பாருங்க. சும்மா வெறுமே சர்ச்சுக்கு வந்துட்டுப் போறதுல எந்த அர்த்தமுமே இல்லை. நீங்க வாரா வாரம் சர்ச்சுக்கு வர்றது முக்கியமில்லை. கர்த்தரோட வார்த்தைகளுக்கு பரிபூரணமாக 100% கீழ்ப்படிந்து நடக்குறீங்களா?

கர்த்தர் சிருஷ்டித்த முதல் மனுஷன் விழுந்து போனான்

கர்த்தர் பாத்துப் பாத்து தன் கைப்படவே முதல் மனுஷனை உருவாக்கினார். தன் கையினாலேயே மண்ணைப் பிசைந்து உருவாக்கினார். தன் சாயலிலேயே உருவாக்கினார். தன்னோட ஜீவ சுவாசத்தையே அவனுக்கு கொடுத்து ஜீவாத்துமாவாக உருவாக்கினார். அவன் தனியா இருக்குகிறது நல்லதில்லைன்னு அவனுக்கு ஒரு துணையையும் உருவாக்குகிறார். அவனில் ஒரு பகுதியாக ஏவாளைப் படைக்கிறார். ஒரு தாய் தகப்பன்

தங்களோட பொண்ணை திருமணம் பண்ணி புருஷன் வீட்டுக்கு அனுப்புறதுக்கு ஒரு வருஷம் முன்னாடியிருந்தே பிளான் பண்ணி, லிஸ்ட் போட்டு, அவளுக்கு என்னவெல்லாம் தேவைப்படும்னு யோசிச்சு, டிஸ்கஸ் பண்ணி, கடை கடையா ஏறி இறங்கி, கட்டில், மெத்தை, பீரோ, கிரைண்டர், மிக்சி, குக்கர் என்று வாங்கி அடுக்கி வச்சு பொண்ணு புருஷன் வீட்டுக்குப் போகும்போது கொடுத்து அனுப்புவாங்களே. அதுபோலவே ஆண்டவர் தான் படைச்ச முதல் மனுஷனுக்கு அவனைப் படைக்கிறதுக்கு முன்னாடியே எல்லாத்தையும் செஞ்சாரு. அவன் சும்மா இருந்தா சோம்பேறியா போயிடுவான்னு அவன் வேலை செஞ்சு பொழைக்க ஏதேன் தோட்டத்தை உருவாக்கிக் கொடுக்கிறார். அதைப் பண்படுத்தி பொழைச்சுக்கிடட்டும் என்று. நல்ல கனி கொடுக்கும் மரங்களையும், நிழல் கொடுக்கும் மரங்களையும் உருவாக்கிக் கொடுக்கிறார்.

ஆண்டவர் ஆதாமை அளவு கடந்து நேசித்தார்

அவனுக்கு தண்ணீர் தேவைப்படுமேன்னு ஆறுகளையும், நதிகளையும் ஏதேன் தோட்டத்துக்குள்ளேயே வரவழைக்கிறார். தாம் படைத்த முதல் மனுஷனும் மனுஷியும் எப்படி இருக்காங்கன்னு தினமும் இறங்கி வந்து பாத்துட்டு அவங்களோட உலா வருவாராம். அந்த அளவுக்கு அவங்களை நேசித்தார். ஏதேன் தோட்டத்தின் மேலே முழு அதிகாரம் கொடுத்தாரு. இதுக்குள்ளே நீங்க எங்கே வேணாப் போங்க. என்ன வேணாலும் செய்யுங்கன்னு ஆண்டவர் முழு அதிகாரம், சுதந்திரம் கொடுத்திட்டாரு. ஒரே ஒரு கண்டிஷன் மட்டும் போட்டாரு. நன்மை தீமை அறியத்தக்க அந்த ஒரு குறிப்பிட்ட மரத்தினுடைய கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம். மற்றபடி மற்ற மரங்களின் கனிகளைப் புசிக்கலாம் என்று ஒரே ஒரு கட்டளை மாத்திரம் கொடுத்தார்.

ஒரே ஒரு தப்புக்கு சகலத்தையும் இழந்துட்டாங்க

ஆண்டவர் கொடுத்த அந்த ஒரே ஒரு கட்டளையை மீறியதின் நிமித்தமாக, அவங்க சகலத்தையுமே இழந்து போயிட்டாங்க.

ஆண்டவரோட அன்பை, அரவணைப்பை, பாதுகாப்பை, ஏதேன் தோட்டத்தை இழந்துட்டாங்க. மரணமில்லாத பெரு வாழ்வாகிய நித்ய ஜீவனையும் இழந்து அவங்களும் பாவத்துல விழுந்து, அவங்க பரம்பரையான நம்மளையும் பாவத்தில் விழ வச்சுட்டாங்க. ஒரே ஒரு பாவத்திற்கு, ஒரே ஒரு குற்றத்துக்கு, கீழ்ப்படியாமைக்கு எல்லாத்தையும் இழந்துட்டாங்க. யாரு? ஆண்டவரே பாத்துப் பாத்து உருவாக்கின, தன் கைப்படவே உருவாக்கின, தன் சாயலிலேயே உருவாக்கப்பட்ட, தன்னோட ஜீவ சுவாசத்தை கொடுத்து ஜீவாத்மாவாக உருவாக்கப் பட்டவர்கள் ஒரே ஒரு கீழ்ப்படியாமைக்காக சகலத்தையும் இழந்துட்டாங்க. அவங்க மேலே சாபமும் வந்துச்சு.

நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறவர்களே நீதிமான்கள்

ஆண்டவர் தம்மோட கைப்படவே உருவாக்கின முதல் மனுஷனுக்கே இந்த கதி, அதுவும் பாவம். அவன் சத்துருவாலும், தன் மனைவி ஏவாளாலும் வஞ்சிக்கப்பட்டு விட்டான். ஆனாலும் மீறுதல் மீறுதல்தான். ஆண்டவர் மன்னிக்கவில்லை. நீ எந்த சூழ்நிலையில் தப்பு செய்தாய் என்பது அல்ல முக்கியம். அதை ஆண்டவர் பார்க்கப் போவது இல்லை. கட்டளையை கடைப்பிடித்தாயா? மீறினாயா? அதை மட்டும்தான் பார்ப்பார். கட்டளையை கடைப்பிடித்ததின் நிமித்தம் நீ எதை இழந்தாலும், எவ்வளவு பாடுகள் பட்டாலும் அதற்குரிய பலனை ஆண்டவர் உனக்கு அபரிமிதமாகத் தருவார். ஆனால் கீழ்ப்படியாமல் போனால், மீறினால் போச்சு.

இப்போ சொல்லுங்க! நாம ஆண்டவரோட எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிஞ்சு நடக்கிறோமா? இல்லை என்றால் ஏதேனும் ஜால்ஜாப்பு சொல்லிக் கொண்டு இருக்கிறோமா? எப்படி இருக்கிறோம்? என்னிக்காவது செக் பண்ணியிருக்கோமா? வாரா வாரம் பிரசங்கத்தைக் கேட்கிறதுனால் மாத்திரம் நாம் பரிசுத்தவான்களாக ஆயிடப் போறது இல்லை. நீதிமானாக ஆகிடப் போறது இல்லை. ஏஞ்சல்

டிவியை பார்க்கிறதுனாலேயோ, ஆசீர்வாதம் டிவி, ஹோலி காட் டிவி செய்திகளை கேக்குறதுனால நாம பரிசுத்தவானாக ஆயிடப் போறது இல்லை. பரலோகத்தை சுதந்திரிக்கப் போறதும் இல்லை. **'நியாயப் பிரமாணத்தைக் கேட்பவர்கள் நீதிமான்கள் ஆக்கப்படுகிறது இல்லை. அதன்படி நடக்கின்றவர்களே நீதிமான்கள் ஆக்கப்படு கிறார்கள்'**னு ரோமர் 2:13 தெளிவாகச் சொல்லுதே.

25 லட்சத்தில் இரண்டே பேர்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே அழைத்து வந்தது ஏறத்தாழ 25 லட்சம் பேர். இந்த 25 லட்சத்தில் கடைசியில் கானான் தேசத்தில் கால் வைத்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? ரெண்டே ரெண்டு பேர் மாத்திரமே. என்னங்க ரேஷியோ இது? 25 லட்சம் எங்கே இருக்கு? ரெண்டே ரெண்டு பேர் எங்கே இருக்கு? மத்தவங்க எல்லாருமே வழியிலேயே வனாந்திரத் திலேயே மரித்தார்கள். ஆண்டவர்தான் அவர்களை மோசேயின் மூலமாக மீட்டு வழி நடத்தினார். இஸ்ரவேல் ஜனங்களை அதிகமாக நேசித்தார். தமக்கென்று அவர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களுக்கு வாக்குத் தத்தங்களை கொடுத்தார்! அவர்களோடு இருந்தார். கண்ணின் மணியைப் போல காத்தார். அவர்களை பெரிய ஜாதியாக்கினார். ஆனா அவங்க தப்பு பண்ணினபோது 400 வருஷம் எகிப்தின் அடிமைத்தனத்திற்கு ஒப்புக் கொடுத்தார். **'அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ வெகு சிலர்'**தான்னு வேதத்தில் படிச்சிருக்கோமே.

பத்து கன்னிகைகளில் ஐந்து பேர் மட்டும்

ஆண்டவருடைய வருகைக்காக பத்து கன்னிகைகள் மிகவும் ஆவலோட, ஆயத்தத்தோடே காத்திருந்தாங்க. அதில ஐந்து பேர் எடுத்துக் கொள்ளப்பட்டாங்க. ஐந்து பேர் விடப்பட்டுட்டாங்க. எடுத்துக் கொள்ளப்பட்ட ஐந்து பேர்ல ஒருத்தரா நாம இருக்கப் போகிறோமா? இல்லை விடப்பட்ட ஐந்து பேர்ல ஒருத்தரா இருக்கப் போறோமா? ஆண்டவரோட வருகை இன்னிக்கு,

இப்போ, இங்கே இருக்குமானால் நாம எத்தனை பேரு மறு ரூபம் ஆக்கப்பட்டு பரலோகம் போவோம்? 100% கோரண்டியா, ஷுவர் சார்ட்டா நான் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்பட்டு பரலோக பிரஜையா இருப்பேன்னு உங்களால உறுதியா சொல்ல முடியுமா? ஆண்ட்வரோட எல்லா கற்பனைகளுக்கும் நாம கீழ்ப்படிஞ்சிருக்கோமா? அதன்படி அப்படியே அச்சரம் பிசகாம நடக்கிறோமா? சொல்லுங்க.

முக்கால் கிணறு தாண்டி பிரயோஜனமில்லை

நாம எந்த பிரிவைச் சேர்ந்தவங்கங்கிறது முக்கியமில்லை. மேலே நாம போற சமயத்திலே நீ ஆர்.சி.யா? சி.எஸ்.ஐ.யா? டி.பி.எம்மா? ஏ.ஜி.யா? ஏ.சி.ஏ.வான்னு ஆண்டவர் கேக்க மாட்டாரு. நீ கல்யாணம் பண்ணினியா? பண்ணலையான்னு ஆண்டவர் கேக்க மாட்டாரு. நீ பூவை எடுத்துட்டியா? பொட்டை கலைச்சிட்டியா? தாலி, நகை எல்லாம் கழட்டிட்டியா? வெள்ளைச் சேலை, வெள்ளை ஜிப்பா எல்லாம் போட்டிருக்கியா? என்று ஆண்டவர் பாக்க மாட்டாரு. வேதத்தின் பிரகாரம், அவரின் கட்டளைகளின் பிரகாரம், அவைகளை முழுமையா கடைப்பிடிச்சு, அவைகளுக்கு ஒண்ணு விடாம கீழ்ப்படிஞ்சு இருக்கோமான்னுதான் பார்ப்பார்! அப்படி நாம இருக்கோமா? அப்படி இல்லேன்னா எல்லாமே வேஸ்ட்டுதான். நாம கிறிஸ்தவங்களா இருந்தது வேஸ்ட். ஞானஸ்நானம் பெற்றது வேஸ்ட். பெயரை மாத்திக்கிட்டது வேஸ்ட். எல்லாமே வேஸ்ட்டுத்தான். முக்கால் கிணறு தாண்டி என்ன பிரயோஜனம்?

ஆண்டவரின் மறுபக்கம்

நாம இதுவரைக்கும் ஆண்டவரோட ஒரு சைடை மாத்திரம்தான் பாத்து இருக்கோம். அவர் இரக்கமுள்ளவர், இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர், கருணை உள்ளவர், தயவுள்ளவர், ஒரு பெற்ற தாயைப் போல அரவணைப்பார், ஒரு தந்தையைப் போல தாங்குவார். சுமப்பார். ஆலோசனைக் கர்த்தர், நம் துக்கங்களை எல்லாம் சந்தோஷமாக மாற்றுவார்ங்கிறது

அவரோட ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தை நாம பார்க்கல. **'அவர் நியாயாதிபதி. அவர் நீதியுள்ள நியாயாதிபதி'** (சங் 7:11) **'அவர் சர்வ லோக நியாயாதிபதி'** (ஆதி 18:25) **'தேவன் பட்சிக்கின்ற அக்கினி'** (உபா 4:4) **'கோதுமையை களஞ்சியத்திலும், பதரையோ அவியாத அக்கினினாலும் சுட்டெரிப்பார்.'** (லூக்கா 3:17) நாம கோதுமையா இருக்கோமா? இல்லை பதரா இருக்கோமா? செக் பண்ணிப் பாருங்க.

வினை விதைத்தால் வினையே அறுவடை

ஒரே ஒரு தப்பு, ஒரே ஒரு மீறுதல், ஒரே ஒரு கீழ்ப்படியாமை, ஒரே ஒரு பாவம், ஒரே ஒரு பொய் கூட நம்மை மட்டுமல்ல, நம்ம பரம்பரையையே பாதிச்சிடும். ஆபிரஹாம் ஒரே ஒரு பொய்தான் சொன்னார். அந்த ஒரு பொய் அவரோட பரம்பரையே பொய்யர்களாக ஆக்கிடுச்சு. வினையை விதைச்சா வினை யைத்தான் அறுவடை செய்ய முடியும். தினையை விதைச்சா தினை. இதுதான் தேவ நியதி. ஆபிரஹாம் தேவ சித்தம் இல்லாத இடத்துக்கு - எகிப்திற்கு மனைவி சாராளை கூட்டிக்கிட்டு போகிறார். சாராளுக்கு அப்போ 75 வயசு. 75 வயசுலேயும் மிகவும் அதிரூபவதியாக இருந்தாளாம். ஆச்சரியமா இருக்குது! அந்த ஊர்ல என்ன ஒரு பழக்கம்னா, பொண்டாட்டி நல்லா இருந்தா, புருஷனை போட்டுத் தள்ளிட்டு பொண்டாட்டியை இழுத்துட்டுப் போயிடுவாங்க. அதுக்குப் பயந்துக்கிட்டு மனைவியைப் பாத்து தன்னோட தங்கச்சின்னு ஆபிரஹாம் பொய் சொல்றாரு. எப்போ? ஈசாக்கெல்லாம் பிறக்குறதுக்கு முன்னாடி.

ஆபிரஹாம் சொன்ன பொய்யின் விளைவு

ஆனா ஆபிரகாம் சொன்ன இந்த ஒரு பொய் அவரோட இரத்தத்துல போயி, இரத்த நாளங்கள்ல போய், இரத்த அணுக்கள், கருவிலே போயி, 25 வருஷத்துக்குப் பிறகு ஈசாக்கு பிறக்கிறான். ஈசாக்குக்கு 40 வயசாகும்போது, அவன் கல்யாணம் பண்ணி மனைவியை கூட்டிட்டு போகும் போது அவனும் மனைவியைப் பாத்து தன்னோட கூடப் பிறந்த தங்கச்சி என்றே சொல்லுகிறான்.

ஆபிரகாம் செய்த தப்பை, பிள்ளையாகிய ஈசாக்கும் தப்பாம அப்படியே செய்யுறான்.

ஈசாக்குக்கு புள்ளைங்க பிறக்குறாங்க. அந்தக் காலத்தில் என்ன ஒரு பழக்கம்னா, தான் சாகப் போகிற சமயத்துல மூத்த மகனைக் கூப்பிட்டு ஆர்வாதங்களை தகப்பன் கொடுப்பான். அதாவது உயில் எழுதி வைக்கிறது போல. ஈசாக்குக்கு அந்திமக் காலம் நெருங்கிய சமயத்திலே தன் மூத்த மகனாகிய ஏசாவை அழைக்கிறான். ஏசாவின் தம்பி யாக்கோபு அண்ணன் ஏசாவைப் போலவே வேஷம் போட்டு, குரலை மாற்றிப் பேசி பொய் சொல்லி ஈசாக்கிடமிருந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறான். மூன்றாவது ஜெனரஷேனுக்கு போகும்போது ஆபிரஹாம் சொன்ன அந்த ஒரு பொய் புள்ளையையே தகப்பனிடம் பொய் சொல்லி ஏமாற்றி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்து விட்டது.

ஒரே ஒரு பொய் பரம்பரையே பாதித்தது.

யாக்கோபுவிற்கு 12 புள்ளைகள். அதில் கடைசிப் பையன் யோசேப்பு. யோசேப்புக்கு கர்த்தர் சில சொப்பனங்கள், தரிசனங்களைக் கொடுக்கிறார். அதை அவன் தன் சகோதரர்களிடம் கூறுகிறான். ஒரு காலத்தில் அவர்கள் அனைவரும் அவனிடம் கையேந்தி நிற்கும் ஒரு நிலை வரும் என்று உரைக்கிறான். இது அண்ணன்மார்களை ஆத்திரப்பட வைக்கிறது. ஒருநாள் யோசேப்பை தவிர மற்ற அனைவரும் ஆடு மேய்க்கச் செல்லுகின்றனர். யோசேப்பு அவர்களுக்காக உணவு எடுத்துக் கொண்டு செல்லுகிறான். ஆத்திரத்தில் இருந்த அண்ணன்மார் அனைவரும் யோசேப்பை போத்திபாரிடம் அடிமையாக விற்று விடுகின்றனர். அப்படி விற்கும்போது, அவனுடைய மேல் சட்டையை மாத்திரம் கழட்டி எடுத்துக் கொள்கின்றார். அந்தச் சட்டையை தங்கள் தந்தையிடம் வந்து காட்டி, தம்பி யோசேப்பின் சட்டை வருகிற காட்டு வழியில இரத்தக் கறையுடன் கிடந்தது. காட்டு மிருகங்கள் அவனை கொன்று தின்று விட்டது என்று அனைவருமே ஒருசேர பொய்

சொல்லுகின்றனர். 4வது தலைமுறைக்கு செல்லுகின்ற சமயத்தில் ஆபிரஹாம் சொன்ன அந்த ஒரே ஒரு பொய் அவருடைய கம்ளீட் பரம்பரையையே பொய்யர்களாக ஆக்கி விட்டது. அதுபோல நாம செய்யக் கூடிய ஒரே ஒரு தப்பு, சொல்லக் கூடிய ஒரே ஒரு பொய் நமது பரம்பரையையே பாதிக்கும்.

அநேகம் பேர் விழுந்து போனார்கள்

ஆபிரஹாம் தேவனால் அழைக்கப்பட்டவர்தான். 'என் சிநேகிதனாகிய ஆபிரஹாம்' என்றே தேவன் அவரை அழைக்கிறார். அப்படிப்பட்ட தேவமனுஷன்தான், விசுவாசத்தின் தந்தை என்று பெயர் பெற்றவர்தான். ஆனால் அவரும் தவறு செய்ய முடியும். செய்கிறார். அதேபோல நாம் அனுதினமும் பைபிள் படிக்கலாம். ஜெபிக்கலாம். சர்ச்சுக்குப் போகலாம். ஆராதிக்கையில் கை தட்டி ஆர்ப்பரித்து தேவனை அகமகிழ்ந்து ஆராதிக்கலாம். ஆனா நம்மோட உள்ளம் எப்படி இருக்கு? பரிசுத்தமா இருக்கா? தேவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் முழுமையா கீழ்படிகிறோமா? சிந்திச்சுப் பாருங்க. பெரிய பெரிய ஜாம்பவான்கள், தேவ மனிதர்கள், அபிஷேகம் பெற்றவர்கள், பெயர் சொல்லி அழைக்கப்பட்டவர்கள் எல்லாம் சின்னச் சின்ன தப்புக்கே விழுந்து போயிட்டாங்க.

சாலமோன் போல இந்த உலகத்திலே ஒரு ஞானவான் இருந்தது கிடையாது. இருக்கப் போறதும் இல்லைன்னு கர்த்தரே சொல்றாரு. அந்த ஞானவானே கடைசியில விழுந்து போனார். **'அவருடைய கற்பனைக் கைக்கொண்டால் அவரின் சொந்த ஜனமாய் இருப்பாய்'** என்று உபா 26:18 சொல்லுதே. கட்டளைகளைக் கைக்கொண்டு அதன்படி நடந்தால்தான் நாம அவரோட புள்ளை. இல்லேன்னா இல்லை.

★ **ஒரு சாதாரண கனியின் இன்பம் ஏதேன் தோட்டத்தை இழக்க வச்சது.** (ஆதி 3:6)

★ **ஒரு வேசியோட இன்பம் சிம்சோனுக்கு கண்களை இழக்க வச்சது.** (நியாயா 16:21)

★ மதுவின் இன்பம் நேபுகாத் நேச்சாரின் மகன் பெல்ஷாத்சாருக்கு இராஜ்ஜியத்தை இழக்க வச்சது. (ஆதி 14:30, 34)

★ சோதோமின் இன்பம் ரூபனுக்கு சாபத்தைக் கொண்டு வந்தது. (ஆதி 42:4)

★ அற்பமான காணிக்கையின் மேலே வச்ச ஆசை கேசியாவுக்கு குஷ்டரோஹத்தைக் கொடுத்தது. (2 ராஜா 5:27)

★ 30 வெள்ளிக் காசுகள் மேலே வச்ச ஆசை யூதாசை சிங்காசனத்தை இழக்க வச்சு தற்கொலையும் பண்ண வச்சது.

★ பாபிலோனின் சாபப் பொருட்களின் மேலே வச்ச ஆசை ஆகானுக்கு அற்ப ஆயுளைக் கொடுத்தது. (யோசு 7:26)

நாம எங்கே இருக்கோம்?

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நாம, பெயர் சொல்லி அழைக்கப்பட்ட நாம, 12 கோத்திரங்களை நியாயந் தீர்க்கிறவர்களாக சிங்காசனத்தின் மேல் அமர்வதற்காக அழைக்கப்பட்ட நாம, நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்காக அழைக்கப்பட்ட நாம, பரலோக பிரஜைகளாக இருப்பதற்காக முன் குறிக்கப்பட்ட நாம அந்த பரம அழைப்பிற்கேற்ற பாத்திரமாக நடந்து கொள்கிறோமா? இல்லே சவுலைப் போல, சாலமோனைப் போல, சிம்சோனைப் போல, யூதாசைப் போல, ரூபனைப் போல, ஏலியைப் போல, பீலேயாம் போல விழுந்து போனோமா? உங்கள் வழிகளை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நீங்க போற பாதை உங்களை பரலோகம் கொண்டு போயி சேர்க்குமா? பெரிய பெரிய ஞானவான்கள், தேவ மனுஷர்களே சின்னச் சின்ன விஷயத்துக்கு, கீழ்படியாமைக்கு விழுந்து போயிட்டாங்க. இவங்கெல்லாம் சத்தியம் தெரிஞ்சவங்கதான், நீதியை படிப்பித்தவர்கள்தான். தேவ சித்தம், ஆக்கினை, கோபம்,

நியாயத் தீர்ப்பு எல்லாத்தையும் அறிஞ்சவங்கதான். ஆனால் மாம்ச இச்சை, இந்த உலகப் பிரகாரமான ஆசைகள், பொன்னாசை, மண்ணாசை, பொருளாசை, பட்டம் பதவி ஆசை, பெருமை, சுயநலம் இவையெல்லாமே சத்துருவின் ஆயுதங்கள், ஏவுகணைகள், பலமான அஸ்திரங்கள். இவைகள் நம்மை லேசா தொட்டாலே போச்சு. விழுந்துடுவோம். பரலோகம் பிறகு எட்டாக்கனிதான்.

இடுக்கமான நெருக்கமான பாதைதான்

கர்த்தரோட எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிஞ்சு நடக்கிறதுங்கிறது கொஞ்சம் சிரமமான காரியம்தான். ஆனால் முடியாதது இல்லை. ஆனா எங்கேயாவது எப்பவாவது ஒரு சின்ன சிலிப் ஏற்பட வாய்ப்புண்டு. ரொம்ப கரடு முரடான பாதைதான். ரொம்ப இடுக்கமான, நெருக்கமான பாதைதான். ஆனா ஒருத்தரும் கெட்டுப் போறது தேவ சித்தமில்லை. அத்தனை பேரும் பரலோக பிரஜைகளா மாறணும்னுதான் தேவன் விரும்புகிறார். அதுக்கு ஒரு லேசான வழியையும் அவர் ஏற்படுத்திக் கொடுத்திருக்காரு. ஆனா நெறையப் பேருக்கு அந்த வழி தெரிஞ்சிருந்தாலும், அந்த வழியாப் போக ஒரு தயக்கம். அக்கறை இல்லை. ஆண்டவர் காட்டுகின்ற அந்த இரண்டாவது வழி மிகவும் எளிதானது, பயனுள்ளது. உன்னதமானது, உயர்ந்தது, நம்மை உயர்த்துவது மட்டுமில்லாமல் அது நிச்சயம் நம்மை பரத்துக்கு அழைத்துச் செல்லும் வழி. அந்த வழியில் செல்லுகிற எவரும் கண்டிப்பாக பரலோக பிரஜைகளாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அந்த வழி ஆண்டவராகிய இயேசுவே நமக்கு காட்டிய வழி. அவர் நடந்த வழி, அவரைப் பிரீதப்படுத்தும் வழி. அதைத் தெரிந்து கொள்வோமா?

அநேகர் அறியாமல் இருக்கின்றனரே

எத்தனை இந்துக்களுக்கு, எத்தனை முஸ்லீம்களுக்கு, புத்த மதத்தினருக்கு மற்றும் சீக்கிய, ஜைன மார்க்கத்தைச்

சேர்ந்தவர்களுக்கு இயேசுவைப் பற்றி தெரியும்? இந்த பிரபஞ்சத்தையும், சகல ஜீவ ராசிகளையும், மனித வர்க்கத்தையும் சிருஷ்டித்தது கிறிஸ்து ஒருவரே, அவர் ஒருவர்தான் மெய்யான தேவன், அவர் ஒருவரால் மட்டும்தான் நமது பாவங்களை மன்னிக்க முடியும். ஏன்னா அவர் ஒருவர்தான் நமது பாவங்களுக்காக மரித்தவர். வேறு எவரும் இல்லை என்கிற சத்தியம் எத்தனை புற ஜாதி மக்களுக்குத் தெரியும்? இயேசு ஒரு மனிதர், அவர் தெய்வமல்ல என்று எத்தனையோ பேர் இன்றும் உண்மை அறியாமல் கூறிக் கொண்டும், நம்பிக் கொண்டும் இருக்கின்றனரே, இவர்களுக்கு யார் புரிய வைப்பார்கள்? அவரை அறிந்தவர்கள்தானே அவரைக் குறித்துக் கூற முடியும்?

விசுவாசியாதவர்கள் கேள்விப்படணுமே

'அவரை விசுவாசியாதவர்கள் அவரை எப்படி தொழுது கொள்வார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் அவரை எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசிங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?' என்று ரோமர் 10:13ல் பவுல் கேட்கிறாரே? இயேசு கிறிஸ்துவைக் குறிச்சு அறிந்த நாம, அவரிடமிருந்து பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும், அன்பையும், அரவணைப் பையும், அதிசயங்களையும், பெற்றுக் கொண்ட நாமதான் போயி அவங்களுக்கு சொல்லணும். இயேசு கொடுக்கிற சந்தோஷம், சமாதானம், விடுதலை குறிச்சு, அதை அவரிடம் பெற்றுக் கொண்ட நாம்தான் எடுத்துச் சொல்லணும். ஏன்னா, அது அவங்களுக்கும் தேவைப்படுது. அது எங்கே கிடைக்கும்னு தெரியாமத்தானே கோயில் கோயிலா, குளம் குளமா, ஊர் ஊரா போய்க்கிட்டு இருக்காங்க. அதிசயங்களையும், அற்புதங் களையும் செய்யக் கட்டிய ஒரே தேவன் இங்கே இருக்காருன்னு சொல்லி எத்தனை பேரை நாம் இதுவரைக்கும் கிறிஸ்துவுக் குள்ளே வழி நடத்தி இருக்கோம்? நெஞ்சுல கையை வச்சு சொல்லுங்க பார்ப்போம்.

நீங்களே எனக்கு சாட்சிகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும், எண்ணி மாளாத அற்புதங்களை நன்மைகளை செய்திருக்கிறார். இதை நம்மில் எத்தனை பேர் வெளியிலே போயி சாட்சியா சொல்லியிருக்கோம்? சாட்சி சொல்றோம். எங்கே? நாலு சுவற்றுக்குள்ளே சர்ச்சுல சொல்றோம். ஒரு கிறிஸ்தவன் இன்னொரு கிறிஸ்தவர்கிட்டே சொல்றோம்.

வெளியிலே போயி என்னிக்காவது புற ஜாதி மக்கள் கிட்டே சொல்லியிருக்கோமா? நீங்களே எனக்கு சாட்சிகள்னு ஆண்டவர் மண்ணான மனுஷனான நம்மைப் பார்த்துத்தானே சொன்னாரு? ஒரு தேவதூதன் கிட்டயோ, சேராபீன், கேராபீன்களிடமோ சொல்லலையே. நாமதான் சாட்சி சொல்லணும். சாட்சியா நிக்கணும், சாட்சியா வாழணும். அப்படி இருக்கோமா? **'அந்தகார இருளில் இருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த வருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், சொந்த ஜனமாயும், பரிசுத்த ஜாதியுமாயும் இருக்கிறீர்கள்'** என்று 1 பேதுரு 2:9ல சொல்லப்பட்டு இருக்கிறதே. ஆண்டவர் செய்த புண்ணியங் களை, நன்மைகளை அடுத்தவர்களுக்கு அறிவிக்கத்தானே தம்மைத் தெரிந்து கொண்டு இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது.

நீ இந்த உலகிற்கு வெளிச்சம்

'அவருடன் இணைந்து இப்பணியை செய்யும்படி நம்மை அவர் அழைத்திருக்கிறார்.' மத் 28: 18-20 **'உன்னை ஜனங்களுக்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைத்திருக் கிறேன்'**னு ஏசாயா 42:7ல் சொல்லப்பட்டு இருக்கிறதே. **'உன்னை இந்த உலகத்திற்கு வெளிச்சமாக வைத்தேன்'**னு மத் 5:14ல ஆண்டவர் நம்மை குறிச்சு சொல்லுகிறாரே. இருளில் வாழும் ஒரு கூட்ட மக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவே கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டுள்ளார். ஆண்டவர் நம்மை எவ்வளவு தூரத்திற்கு நம்புகிறார் பாருங்க. அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாக

நாம நடந்து கொள்கிறோமா? இல்லையே! சுவிசேஷத்தை அறிவிக்கிறது போதகரோட வேலை, ஊழியக்காரங்க, மிஷனரிகளோட வேலை. அதுக்குன்னு விசேஷித்த அழைப்பு, அபிஷேகம் இருக்கணும். அப்படீன்னு நினைக்கிறோம்.

யார் பரலோகம் போவார்கள்?

பரலோகத்தை யார் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று வேதம் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. **'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை செய்கின்றவர்களே பரலோகத்தில் பிரவேசிப்பார்களே ஒழிய என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடுகிறவர்கள் அதில் பிரவேசிப்பது இல்லை'** என நமது ஆண்டவராகிய இயேசுவே நெத்தியடியாகக் கூறிவிட்டார் மத் 7:21ல். பரலோகத்திலே இருக்கிற பிதாவின் சித்தத்தை செய்கிறவன் மட்டுமே பரலோகத்தில் பிரவேசிப்பான். வேற யாரும் இல்லை. நான் பரம்பரைக் கிறிஸ்தவன், நான் 10 வருஷமா சர்ச்சுக்குப் போறேன். 20 தடவைகள் பைபிளை படிச்சு முடிச்சிருக்கேன். நான் அபிஷேகம் பெற்று இருக்கேன். அந்நிய பாஷை பேசுகிறேன், முழுகி ஞானஸ்நானம் எடுத்து இருக்கிறேன், தசம பாகம், காணிக்கை ஒழுங்காக கொடுக்கிறேன், நான் பூ, பொட்டு, நகை, நட்டு, தாலி எல்லாம் எடுத்துப் போட்டுட்டேன். பளிச்சுன்னு பளீர் வெள்ளையில் தும்மைப் பூப் போல வெள்ளை சேலை கட்டுகிறேன் என்று கூறுகிறவர்கள் அல்ல. **'அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள். நான் மறு உத்தரவு தர மாட்டேன்'** என்று இயேசு சொல்லுகிறார் (நீதி 1:28). பிதாவின் சித்தம் செய்கிறவர்களே பரலோகத்தில் பிரவேசிப்பார்கள்.

பிதாவின் சித்தம் செய்கிறவர் பரலோகம் செல்வர்

பரலோகத்தில் பிதாவின் சித்தம் என்ன? அதையும் 1 தீமோ 2:4 கூறுகிறது: **'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்!'** ஆம், ஒருத்தரும் கெட்டுப் போவதோ, நரகம் போவதோ தேவ சித்தம் அல்ல.

அனைவரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அதாவது பரலோகம் செல்லுகின்ற வழியை அறியவும் தேவன் சித்தம் கொண்டுள்ளார். அவர் பூலோகத்தில் மனித அவதாரம் எடுத்து வந்தது கிறிஸ்தவர்களுக்காக மட்டும் அல்ல. மனிதர்களாக அவதரித்த அனைத்து மக்களுக்காகவும்தான் அவர் மனித அவதாரம் எடுத்து வந்தார். அவர் அனைவருக்காகவும்தான் இரத்தம் சிந்தினார். அதன் மூலம் மனுக் குலத்தின் ஒட்டு மொத்த பாவத்திற்கும் பாவ விமோசனம் பெற்றுத் தந்தார். இதை விசுவாசிப்பவர்களுக்கு விமோசனம் கிடைக்கிறது.

சுவிசேஷம் நம் தலை மேல் விழுந்த கடமை

கிறிஸ்தவர்கள், புறஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அழைப்பு தேவையில்லை. ஒரு திருச்சபையை நடத்த அழைப்பு, அபிஷேகம் தேவை. சுவிசேஷத்தை அறிவிக்க அல்ல. அது நம்மோட தலைமேல் விழுந்த கடமை. இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கண்டிப்பாக செய்ய வேண்டிய ஒரு கடமை அது. அதைத் தான் பவுல் அழகாய்ச் சொல்கிறார். **'சுவிசேஷத்தை அறிவித்தல் என் தலைமேல் விழுந்த கடமையாக இருக்கிறது.'** அது நம் மேல விழுந்த கடமை, கட்டளை. **'நீங்கள் உலகமெங்கும் போயி சுவிசேஷத்தை அறிவியுங்கள்'** - மாற்கு 16:15. இது தேவ கட்டளை. **'இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவியுங்கள்'** - ரோமர் 15:21. இது கிறிஸ்துவின் கட்டளை. **'நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜனங்களையும் சீராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுங்கள்'** மத் 28:15, 20 - இது கர்த்தரின் கட்டளை. **'நீ சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று'** - 2 திமோ 4:5ல தேவன் கட்டளையிடுகிறார். **'நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாக இருப்பாயாக'** - கொலோ 4:17. இது மீற முடியாத கட்டளை. **'கர்த்தரை துதித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்'** சங் 105:1ல் கூறியிருப்பது தேவ கட்டளை.

தயக்கம் வேண்டாம்

இந்த கட்டளைகளுக்கு நாம கீழ்ப்படிஞ்சிருக்கோமா? இதெல்லாம் நம்ம பரிசுத்த வேதாகமத்தில் இருக்கிற வசனங்கள்தானே? இந்த வசனங்கள் எல்லாம் ஆவியானவரின் ஏவுதலின்படி எழுதப்பட்ட தேவ கட்டளைகள்தானே? இந்த கட்டளைகளுக்கு நாம கீழ்ப்படிஞ்சு நடந்திருக்கோமா? சொல்லுங்கள். ஒரே ஒரு கட்டளையை மீறியதின் நிமித்தம் எப்பேர்ப்பட்ட தேவ மனுஷர்களெல்லாம் விழுந்து போயிட்டாங்கன்னு பார்த்தோம் இல்லையா? இப்போ சொல்லுங்க. நீங்க பரலோகம் போக முடியுமா? சும்மா சர்ச்சுக்கு வந்துட்டுப் போறதுனால எந்தப் பிரயோஜனமும் இல்லைன்னு இப்பவாவது தெரிஞ்சுக்கிட்டீங்களா? பயப்படாதீங்க. சோர்ந்து போகாதீங்க. சுவிசேஷத்தை எப்படிடா சொல்றதுன்னு ஒரே தயக்கமா இருக்கா? ஏன் கவலைப்படுறீங்க? நமக்கு வழிகாட்டுறதுக்குத்தான் நம்ம ஆண்டவர் இருக்காரே!

இயேசு நமக்கு ஒரு முன்மாதிரி

இரட்சிப்பு நம்மோடது இல்லை. அது கர்த்தரோடது. ஊழியமும் நம்மோடது இல்லை. அதுவும் கர்த்தரோடது. நாம ஒரு சாதாரணக் கருவி. **'பவுல் நட்டான், அப்பெல்லோ நீர் பாய்ச்சினான். கர்த்தரோ விளையச் செய்தார்'**னு வேதத்தில் பாக்குறோமே. விளையச் செய்கிறவர் கர்த்தர். அவர்கிட்டேயே கேட்போம். ஆண்டவரே, எனக்கு சுவிசேஷம் எல்லாம் சொல்லத் தெரியாது. நீர் கத்துக் கொடும்னு கேட்போம். ஆண்டவர்தான் வாக்குப் பண்ணி யிருக்காரே! **'உங்களை மனுஷர்களை பிடிக்கிறவர்கள் ஆக்குவேன்'**னு (மத் 4:18). அதுக்கு என்ன செய்யணும்? **'என் பின்னே வாருங்கள்'**னுதானே சொன்னாரு. அவர் நம்ம முன்னாடி போறாரே! சுவிசேஷத்தை எப்படிச் சொல்லணும், செய்யணும்னு செஞ்சு காட்டியிருக்காரே! அவரை ஃபாலோ பண்ணினாப் போதுமே, **'எனக்கு ஒருவன் ஊழியம் செய்வானாகில் அவன் என்னைப் பின்பற்றக் கடவன்'**னு ஆண்டவர் யோ 12:26ல சொல்லியிருக்காருல்ல. பின்ன என்ன? அவருகிட்டேயே கேட்போம்.

ஆத்துமாக்களுக்காக அழுது கேட்கணும்

ஆண்டவரே, எனக்கு, இந்த ஆத்துமாக்கள் வேணும். என் எதிர் வீட்டுல இருக்கிற ஏகாம்பரம் இரட்சிக்கப்படணும் தகப்பனே. அடுத்த வீட்டு அம்புஜம், பக்கத்து வீட்டு பாஸ்கரன் அந்த காலேஜ் பிரின்ஸ்பல் இரட்சிக்கப்படணும், இந்த ஆஸ்பத்திரி வச்சிட்டு இருக்கிற டாக்டர் உம்மோட பிள்ளையா மாறணும். இந்த ஜவுளி கடைக்காரர், அந்த நகைக்கடை மார்வாடி, இந்த காலேஜ் புரபசர், அந்த ஸ்கூல் டீச்சர், டிராவல்ஸ் வச்சிருக்கிற அதன் ஓனர், அந்த மாந்தோப்பு மாடசாமி, அந்த தென்னந்தோப்பு தியாகராஜன், எல்லாரும் இரட்சிக்கப்படணும் தகப்பனே. நான் கார் கேக்கலை, பங்களா கேக்கலை, சொத்து சுகம் நான் கேக்கலை. எனக்கு அந்த ஆத்துமாக்கள் வேணுமப்பா, அவங்க கெட்டு நரகத்துக்குப் போகக் கூடாதப்பா. எனக்கு அவங்க இரட்சிக்கப்படணும்னு கண்ணீரோட கேளுங்க.

தேவனை நோக்கி செய்கிற ஒரே விண்ணப்பம்

'என்னைக் கேளும், ஜாதிகளை உனக்கு சொந்தமாகவும், பூமியின் எல்லைகளை உனக்கு சுதந்திரமாகவும் தருவேன்'னு ஆண்டவர் சங். 2:8லே சொல்லியிருக்காரே. ஜாதிகளைக் கேளுங்க. பூமியின் எல்லைகளைக் கேளுங்க, அழுது புலம்பி அடம் பிடிச்சுக் கேளுங்க. விடாப்பிடியா கேளுங்க. விடாமக் கேளுங்க. போராடிக் கேளுங்க. உபவாசித்து கேளுங்க. ஏனோ, தானோன்னு கடனுக்கு கேக்குற மாதிரி கேக்கப்பிடாது. ஆத்தும பாரத்தோடே உண்மையிலேயே பாரப்பட்டுக் கேளுங்க. தேவன் கண்டிப்பாக மனம் இறங்குவார். எப்பேர்ப்பட்ட கடின இருதயங்களையும் உடைச்சுத் தருவார். உங்க இதயத்திலே இந்த ஒரே ஒரு விண்ணப்பம் மட்டும் இருக்கட்டும். கர்த்தர் கிட்டே வைக்கிற ஒரே விண்ணப்பம் இது மட்டுமே இருக்கட்டும். வேற எதையும் அவர்கிட்டே நாம் கேக்க வேண்டாம். பவுலடிகள் ஆண்டவர்கிட்டே அப்படித்தானே வேண்டினார். ரோமர் 10:1ஐப் பாருங்க. **'இஸ்ரவேலர் ரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும், நான் தேவனை நோக்கி செய்கின்ற**

விண்ணப்பமுமாயும் இருக்கிறது'னு ஜெபிக்கிறார். அவரும் மனுஷன்தான். அவருக்கும் 1008 தேவைகள் இருக்கு. ஆனா எதையுமே அவர் ஆண்டவர்கிட்டே கேக்கலை. இஸ்ரவேலரின் இரட்சிப்பை மாத்திரம்தான் கேட்டாரு.

நம் தேவைகளை தேவன் அறிவார்

ஏங்க, நம்ம வீட்டு சின்னக் குழந்தையை எல்.கே.ஜி. யு.கே.ஜி.யில சேர்க்கிறோம். அதுக்கு, ஷூ, சாக்ஸ், வாட்டர் பாட்டில், டிபன் பாக்ஸ், ஒரு பை எல்லாமும் தேவைப்படுது. இதையெல்லாம் அது கேட்டா நாம அதுக்கு வாங்கிக் கொடுக்கிறோம்? இல்லையே! மாம்சமான நமக்கே பிள்ளை களுக்கு இதெல்லாம் தேவைன்னு தெரிஞ்சு, அதுங்க கேக்காமலேயே இவைகளை வாங்கி எடுத்து நாம கொடுக் கிறோம். வானத்தையும், பூமியும், நம்மையும் படைச்ச அந்த சர்வ வல்ல தேவனுக்கு நமக்கு என்னவெல்லாம் தேவைப்படும்னு அவருக்குத் தெரியாதா? நமக்கு குடியிருக்க ஒரு வீடு வேணும், வீட்டுக்காரர் குடிப் பழக்கம் போகணும், பையனுக்கு நல்லதொரு வேலை கிடைக்கணும், பொண்ணுக்கு கல்யாணம் ஆகணும், ஏற்கனவே கல்யாணம் ஆனவளுக்கு ஒரு குழந்தை பிறக்கணும்னு எல்லாம் அவருக்குத் தெரியாதா என்ன? நல்லாவே தெ ரியும். ஏற்ற வேளையிலே இதையெல்லாம் நமக்கு கண்டிப்பா தருவார். **'உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்'**னு மத் 6:32 சொல்லுதே.

கண்ணீரோடு விதைப்போம்

ஆத்துமாக்களுக்காக நாம வெறுமே ஜெபம் மட்டும் பண்ணினா போதாது. அதை செயலிலேயும் காட்டணும். **'கிரியை இல்லாத விசுவாசம் செத்தது'**ன்னு வேதம் சொல்லுதே. ஜெபமும் வேணும். கிரியையும் வேணும். சுவிசேஷத்தை அறிவிக்கிறதுக்கு முதல்ல நாம செய்ய வேண்டியது என்னென்னா, யாருகிட்டே, சுவிசேஷத்தை சொல்றது? எப்போ சொல்றது? எப்படி சொல்றது? அப்படீங்கிற கேள்விகள் எல்லாம் எழுகிறது இல்லையா? இவைகளை ஒண்ணு ஒண்ணா பார்ப்போம்.

யாருகிட்டே சொல்றது? இயேசு கிறிஸ்துவை அறியாத, இதுவரை அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாதவர் கிட்டே சொல்லணும். நம்மைச் சுற்றி, நாம இருக்கிற இடத்தை, வீட்டைச் சுற்றி எத்தனையோ பேர் இருக்காங்க. நம்மோட சொந்த பந்தம், உறவுகளிலே இன்னும் இரட்சிக்கப்படாத எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். முதல்ல அவங்க பெயர்களை எல்லாம் எழுதுங்க. ஒரு கொயர் நோட்டு ஒன்றை வாங்கி அதுல எழுதுங்க. அந்த நோட்டு மேலே ஜெபக் குறிப்புகள்னு தலைப்பு எழுதுங்க. முதல்ல சில பக்கங்கள்ல உறவினர்கள்ல யார் யார் இரட்சிக்கப் படணுமோ அவங்க பெயர்கள், அப்புறம் நண்பர்கள், அக்கம் பக்கத்தார், உடன் வேலை செய்யுறவங்க, கூடப் படிச்சவங்க, அப்புறம் ஹலோன்னு சொல்ற தெரிஞ்சவங்க, ஏரியாவாசிங்க, என்று ஒன்று விடாம எழுதுங்க. ஒவ்வொருத்தர் பேரையா சொல்லிச் சொல்லி கண்ணீரோட தினமும் ஜெபம் பண்ணுங்க.

ஊர் உலகம் உன்னிப்பா உன்னைப் பாக்குது

ஊர் உலகத்துல எல்லாருமே உங்களைப் பாத்துக்கிட்டு இருக்காங்க. தினமும் பாக்குறாங்க. நீங்க கிறிஸ்துவை ஏத்துக்கிறதுக்கு முன்னாடியும் பாத்தாங்க. உங்களை நல்லா தெரியும், உங்க குணம், கோப தாபம், எரிச்சல், வம்பு, வீம்பு, வைராக்கியம், பேசுறது, அடுத்தவங்களைப் பத்தி குறை சொல்றது, நீதி, நேர்மை, உண்மை, உத்தமம், ஒழுக்கம், நம்ம குடும்ப வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை, சமூக வாழ்க்கை, பக்தி வாழ்க்கை, அலுவலக வாழ்க்கைன்னு எல்லாமே தரோவா அவங்களுக்குத் தெரியும். நீங்க கிறிஸ்துவை ஏத்துக்கிட்டப் பிறகும், உங்களை எல்லாரும் பாக்குறாங்க. முன்னாடி பார்த்ததை விட இப்போ இன்னும் கொஞ்சம் உன்னிப்பா, கூர்மையா, குளோஸா கண்ணுல வெளக்கெண்ணை ஊத்திக்கிட்டு பார்ப்பாங்க. ஏதாவது மாற்றங்கள் தெரியுதா? அது நல்ல மாற்றங்களா? கெட்ட மாற்றங்களா? சுபாவங்கள், குணாதிசயங்கள், பழக்க வழக்கங்கள், எல்லாம் மாறியிருக்கா? பாக்குறாங்க.

சுபாவ மாற்றங்கள் வெளிப்படையா தெரியட்டும்

மாற்றங்கள் தெளிவா, வெளிப்படையா தெரியணும். நம்மோட நடை, உடை, பாவனை, பேச்சு, தோரணை, பழக்க வழக்கங்கள் எல்லாத்திலேயும் ஒரு நல்ல மாற்றம் வெளிப்படையா தெரியணும். அவன் முன்னாடி மாதிரி இல்லப்பா, டோட்டலா மாறியிருக்கான். அவனோட நடக்கை, செயல்பாடுகள், பேச்சுல ஒரு பெரிய மாற்றம் தெரியுது. ரொம்ப அமைதியா, அடக்கமா, பொறுமையா, சாந்தமா பதில் சொல்றான். அரட்டை அடிக்கிற இடத்தில, அடுத்தவங்களைப் பத்தி குறையா, வம்பா பேசுகிற இடத்தில கூட அவன் நிக்கிறது இல்லை. சிகரெட், டிரிங்ஸ், சினிமான்னு எந்த கெட்ட பழக்க வழக்கங்களும் இப்போ அவன்கிட்டே இல்லை. அவன் கிறிஸ்தவனா மாறினாப் பிறகு ஒரு பெரிய மாற்றம் தெரியுது. அளந்து பேசுறான், நிறுத்தி நிதானமா, ஞானமா பேசுறான். அப்படீன்னு, நம்மை நல்லா தெரிஞ்ச அத்தனை பேரும் சொல்லணும்.

சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை

நம்ம ஆண்டவருக்கு நாம ஒரு சாட்சியா நிக்கணும், வாழணும். நம்மோட நடக்கைகள் மூலமா கர்த்தரோட நாமம் மகிமை படணும். **'புற ஜாதி மக்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றின் நிமித்தம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி நல் நடக்கை உள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்'**னு 1 பேதுரு 2: 11, 12 சொல்லுதே. ஒரு நல்ல சாட்சியுள்ள வாழ்க்கை வாழாம நாம என்னதான் சுவிசேஷத்தை எத்தனை தடவை சொன்னாலும் அதனால எதுவும் நடக்காது. டைம், எனர்ஜிதான் வேஸ்ட் ஆகும்.

நன்மை செய்யும் இயேசு நமக்கும் வேணும்

எப்பப் பார்த்தாலும் இவங்க சிரிச்சுக்கிட்டே அமைதியா, சந்தோஷமா இருக்காங்களே, எப்படி இவங்களால இப்படி இருக்க முடியுது? இந்த விலைவாசி ஏற்றம், பால் விலை, கேஸ் விலை, பெட்ரோல் விலை, கரண்ட் சார்ஜ், பஸ் சார்ஜ், டிரெயின் சார்ஜ், வீட்டு வாடகை ஏற்றம் எல்லாமே நமக்கு மட்டும்தானா?

இவங்களுக்கு இல்லையா? இந்த கஷ்ட நஷ்டம் எல்லாம் நமக்கு மட்டும்தானா? அவங்க வாயிலிருந்து ஒரு முணுமுணுப்பையும் பாக்க முடியலையே ஏன்? எதுனால? இவங்களுக்குள்ள இயேசு கிறிஸ்து இருக்கிறார். அதுனால இவங்களால எல்லா சூழ்நிலை களிலேயும் சந்தோஷமா இருக்க முடியுது. இந்த இயேசு கிறிஸ்து நமக்கும் வேணும். அப்படீன்னு ஒவ்வொருத்தரும் உணர்ந்து கொள்ளும்படியா நம்மோட வாழ்க்கை இருக்கணும். அப்படி வாழ்ந்து சுவிசேஷம் சொல்லிப் பாருங்க. கண்டிப்பாக அவங்க ஒத்துப்பாங்க.

இன்னிக்கு நம்ம தேசத்தில் சுவிசேஷம் பரவாம இருக்கிறதுக்கு முக்கிய காரணமே நாமதான். நம்மோட சாட்சியில்லாத ஒரு வாழ்க்கையினாலதான். எல்லாருக்குமே இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஓரளவுக்குத் தெரியும். அதைவிட கிறிஸ்தவர்களைக் குறிச்சு ரொம்ப நல்லாவே தெரியும். அதுதான் பிராபளம். கிறிஸ்துவை பிடிச்சிருக்கு, அவர் மேல எந்த வெறுப்பும் இல்லை. ஆனா கிறிஸ்தவனைப் பிடிக்கல. கிறிஸ்தவத்தின் மேலேயே ஒரு வெறுப்பு வரும்படியா கிறிஸ்தவன் நடத்துக்கிறான்! பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னித்தல் போன்ற நல்ல குணங்களை பார்க்கிறது அரிதா இருக்குது.

நான் பரிசுத்தர். நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்

கிறிஸ்துவுக்குள்ள வர்றதுக்கு முன்னாடி நாம என்ன தப்பு தண்டா பண்ணினாலும் யாரும் அதைப் பெருசா எடுத்துக்கிறது இல்லை. ஆனா கிறிஸ்தவனா மாறினப் பிறகு நம்ம சுபாவங்கள் மாறலைன்னா அது, ரொம்ப பெருசாகப்படும் அவங்களுக்கு. இதுதான் வித்தியாசம். ஏன்னா எங்க தெய்வம் பரிசுத்தம்னு அவங்க யாரும் சொல்றது இல்லை. கிறிஸ்தவங்க மாத்திரம்தான் சொல்றோம். அதுனால நாம ஒரு சின்ன தப்பு பண்ணினாலும் அது பெருசாத்தான் அவங்க கண்ணுல படும். அங்கே கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. **'நான் பரிசுத்தர். நீங்களும் பரிசுத்தராய் இருங்கள். பரிசுத்த அலங்காரத்துடன் என்னைத் தொழுது கொள்ளுங்கள்'**னு நம் ஆண்டவர் நம்மைப் பார்த்துச்

சொல்லியிருக்காரே. இது அத்தனைக்கும் மேலே நாம ஒரு உண்மையான கிறிஸ்தவ அன்பை மத்தவர்கிட்டே காட்டுறது இல்லை. **'உன்னை நேசிப்பதுபோல பிறரையும் நேசி'** என்று ஆண்டவர் சொல்லியிருக்காரு. அதைச் செய்யுறது இல்லையே நாம. **'உங்கள் சத்ருக்களையும் சிநேகியுங்கள். அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்'**ஞு வேதம் சொல்லுது. உண்மையான கிறிஸ்தவ அன்பைக் காட்டி, அடுத்தவங்களுக்கு சின்ன சின்ன உதவிகள் செய்தோம்னாலே அவங்க விழுந்திடுவாங்க.

கிறிஸ்தவர்கள் செய்யும் தவறுகள்

அடுத்து கிறிஸ்தவர்களா இருந்துக்கிட்டு சிகரெட் பிடிக்கிறோம், புகையிலை யூஸ் பண்றோம், தண்ணி அடிக்கிறோம், கெட்ட வார்த்தை சொல்லி திட்டுறோம், வேலைக்கு சரியான டயத்தில் போறதில்லை, லேட்டா போறோம். மனைவியோட ஒரு நல்ல உறவு இல்லை; உறவினர்களோட, உடன் பிறந்தவங்களோட சண்டை, சச்சரவு, பிள்ளைகளை ஒழுங்கா வளர்க்கிறது இல்லை, ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்குப் போறது கிடையாது. கட்டு செட்டா குடித்தனம் நடத்துறது இல்லை. வருகிற வருமானத்தில் ஃபேமிலியை நடத்தாம கடன் வாங்குறோம்.

பிள்ளைகளுடைய திருமண வாழ்க்கைக்கு தேவனுடைய சித்தத்தை அறிஞ்சு செயல்படாம, பையன் என்ன வேலை பாக்குறான், என்ன சம்பளம் வாங்குறான், பொண்ணுக்கு எத்தனை பவுன் நகை போடுவாங்க, கார் வாங்கிக் கொடுப்பாங்களா? வரதட்சணை எவ்வளவு ரொக்கமா கையிலே கொடுப்பாங்க, சீர் செனத்தியெல்லாம் எப்படி கொடுப்பாங்க. இதுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்குறோம். கிறிஸ்தவங்க வீட்ல எத்தனை வரதட்சணைக் கொடுமைகள், மருமகளை கொடுமைப்படுத்துவது, டைவோர்ஸ், கணவன் மனைவி பிரிந்து இருத்தல், பல திருமணமானவர்கள் இன்னொரு பெண் அல்லது ஆணோடு தவறான உறவு வைத்துக் கொள்ளுதல் போன்ற

காரியங்களினாலேயே தேவ நாமம் அங்கே தூஷிக்கப்படுதே. சாட்சி கெடுதே, ஊர் உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்குதே.

இன்னும் ஜாதி பார்க்கும் சராசரி கிறிஸ்தவர்கள்

இது அத்தனைக்கும் மேலே கிறிஸ்துவுக்குள்ளே வந்தப் பிறகும் இன்னும் நெறையப் பேரு ஜாதி பார்த்துக்கிட்டு இருக்கோமே. பொண்ணு, பையன் திருமணங்களுக்கு அந்த ஜாதியிலேயே வரன் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தால கழுவப்பட்டு நாம எல்லோரும் ஒரே குடும்பம், ஒரே இரத்தம்னு ஆனாப் பிறகும், இன்னும் நாம ஜாதி பார்க்கிறோமே. நான் மேல் ஜாதி, நீ கீழ் ஜாதி, நீ எஸ்சி, எஸ்டி, எங்க சபைக்கு நீ வரக் கூடாது என்று இன்றும் பாகுபாடு, வேறுபாடுகள் பார்த்துக் கொண்டு இருந்தோமானால் தேவன் அதை மன்னிப்பாரா? கிறிஸ்தவர்கள் இப்படி நடந்துக்கிடுறது தேவனுடைய சிருஷ்டிப்பையே கேள்விக்குறியாக்குகிற ஒரு இழிச் செயல் இல்லையா? பல கிறிஸ்தவ பத்திரிகைகளில் மேரேஜ் பீரோ விளம்பரங்கள் வருது. அதுல இந்த ஜாதியில மாப்பிள்ளை, பொண்ணு வேணும்னுதான் வருது. இது எவ்வளவு பெரிய கேவலம். இதுக்கு சபை போதகர்களும் துணை போவதுதான் கொடுமையிலும் கொடுமை.

விமர்சனம் வேண்டாம்

இவை மாத்திரம் அல்ல, நம்ம ஆண்டவரைப் பத்தி நாம உயர்த்திப் பேசுகிற சமயத்தில் அவங்களோட தெய்வங்களை நாம் எக்காரணம் கொண்டும் எந்தக் குறையும் சொல்லக் கூடாது. நீங்க கல்லைக் கும்புடுறீங்க, மண்ணைக் கும்பிடுறீங்க, அது ஒரு பிசாசு, சாத்தான் என்றெல்லாம் சொல்லி அவங்க மனசை காயப்படுத்துறோம். அவங்களோட மத உணர்வுகளையோ, அல்லது அவங்க பின்பற்றுகின்ற சடங்காச்சாரங்கள், சில மூட நம்பிக்கைகள் பற்றியோ எந்த ஒரு விமர்சனமும் செய்ய வேண்டாம். தேவைப்படுகின்ற சமயத்தில ரொம்ப பக்குவமா, ஞானமா, அவங்க மனசு புண்படாத படிக்கு ஒரு கேள்வியைக்

கேளுங்க. 'எங்க, கடவுள் மனிதனைப் படைத்தாரா? இல்லை, மனுஷன் கடவுளைப் படைத்தானா? கடவுளுக்கு ஏதாவது உருவம் இருக்கா? அவர் அரூபியாக, உருவமற்றவராக இருக்கிறார்னுதானே இந்துமத வேதங்களும், வேதாந்தங்களும் சொல்றது. கடவுள் இப்படித்தான் இருப்பார்னு யாராவது பார்த்து இருக்காங்களா? கடவுளை இதுவரைக்கும் யாருமே பாத்தது கிடையாதுன்னுதான் வேதங்கள் கூறுகின்றன.

இந்துக்களின் கேள்விகளுக்குப் பதில்

பொதுவா சுவிசேஷத்தை அறிவிக்கிற சமயத்தில புற ஜாதி மக்கள் என்ன என்ன கேள்விகள்லாம் கேப்பாங்க. நமக்கு என்ன பதில் சொல்லுவாங்க, என்ன வாக்குவாதம் பண்ணுவாங்க. அதுக்கு என்ன பதில் சொல்லணும்கிறதை **'கிறிஸ்தவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் பதிலும்'** என்று இரண்டு பார்ட்டாக வெளியிட்டு இருக்கிறேன். அதை வாங்கி படிச்சுப் பாருங்க. இதுக்கு மேல அவங்க எந்த கேள்வியும் கேட்க முடியாதபடி 102 கேள்விகளுக்கு பதில் அதிலே இருக்கு. அதை வாங்கிப் படிக்க கொடுங்க. அப்படியே எந்த புக்கையும் ஃப்ரியா கொடுக்காதீங்க. ஃப்ரியா கொடுத்தா அதுக்கு வேல்யூவே கிடையாது.

அவங்களைப் படிக்க வைக்கணும்

இது இன்னொருத்தரோட புக். படிச்சேன் ரொம்ப நல்லா இருந்தது. உங்களுக்குத் தாரேன். ஆனா ஒரு கண்டிஷன். இதைப் படிச்சிட்டு நாளைக்கே திருப்பிக் கொடுத்திடணும். இதைத் திருப்பிக் கொடுத்தா இதையும் விட இன்னும் ஒரு சூப்பர் புக் இன்னொருத்தர் கிட்டே இருக்கு. அதை வாங்கித் தாரேன்னு ஒரு கொக்கி போட்டு வையுங்க. அவங்களை எப்படியாவது படிக்க வைக்கணும். சும்மா கொடுத்தா படிக்க மாட்டாங்க. அப்புறம் படிக்கலாம்னு தூரமா வச்சுடுவாங்க. மறுநாளே காலையிலே போன் பண்ணி கேளுங்க படிச்சிட்டீங்களான்னு. சாயங்காலம் வந்து வாங்கிக்கிறேன்னு சொல்லி பிரஷர் கொடுங்க. புக்கை

கொடுக்கிறதுக்கு முன்னாடியும் ஜெபம் பண்ணுங்க. கொடுத்தப் பிறகும் ஜெபம் பண்ணுங்க. இப்படியே ஒரே புக்கை 25, 30 பேருக்கு கொடுத்து கொடுத்து வாங்குங்க. ஒரு சர்குலேஷன் லைப்ரரி மாதிரி வச்சு செய்யுங்க.. இப்படி ஊழியம் செய்யுறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. **'கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள்' 'ஜெபத்தோடே விதைக்கிறவர்கள் ஜெயத்தோடே அறுப்பார்கள்'.**

இந்துக்களுக்கு சத்தியத்தை அறிவிக்கும் நூல்கள்

இப்படி புற ஜாதி மக்களுக்கு கொடுப்பதற்கென்றே 22 புத்தகங்கள், 3 விசிடி வெளியிட கர்த்தர் எனக்கு கிருபை தந்துள்ளார். இயேசு ஒருவரே மெய்யான தேவன் என்று சித்தர்கள், ஞானிகளின் பாடல்கள், இந்துமத வேதங்களில், வேதாந்தங் களில், உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டு இருக்கிற இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், சைவம், வைணவம் உருவானதே கிறிஸ்தவத்தின் அடிப்படையில்தான், இந்து தெய்வமாக போற்றப்படுகின்றவைகள் எல்லாமே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் உருவகம்தான், ஆனால் அவர்கள் எல்லாமே டூப்ளிகேட், உருவகம் என்றும் உருவகம்தான். ஒரிஜனலைப் பிடித்தால்தான் பரலோகம் போக முடியும் என்று ஆதாரத்தோடு இந்த புத்தகங்கள், விசிடியில் எழுதி இருக்கிறேன்.

அதன் லிஸ்ட்டை இப்புத்தகத்தின் கடைசியில் 'இணைப்பு **A**' யில் காணலாம். என்னுடைய எல்லா புத்தகங்களுமே பத்து ரூபாய்தான். விசிடியும் பத்து ரூபாய்தான். ஐந்து ரூபாய்க்கும் சில புத்தகங்கள் எழுதியிருக்கேன். விலை குறைவா இருக்கிறதுனால நிறையப் பேரு பண்டில் பண்டிலா வாங்கி கல்யாணத்தில, கிரஹப் பிரவேசத்தில, பிறந்த நாளில, கிறிஸ்துமஸ், நியூ இயர்க்கென அன்பளிப்பா கொடுக்கிறாங்க. பஸ்ஸில, டிரெயின்ல, பார்க்கில, ஹோட்டல்ல, ஆஸ்பத்திரியில புக்கை படிச்சிட்டு அங்கேயே வச்சிடுறாங்க. புத்தகம் யாராவது எடுத்துப் படிக்கட்டுமே என்று. டிராக்ஸ்ன்னா படிக்காமலே கசக்கிப் போட்டுடுறாங்க.

புரியாத பல விஷயங்களுக்குப் பைபிலே பதில் தந்தது

நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நிறைய இந்துமத வேதங்கள், வேதாந்தங்கள், சித்தர்களின் பாடல்களைப் படித்திருக்கிறேன். சிறு வயது முதலே நிறைய புத்தகங்கள் படிப்பதில் எனக்கு ஆர்வம் இருந்தது. அதுவும் ஒரு பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் ஆன்மீகத்தில் ஒரு அதீத பற்றுடன் ஈடுபட ஆரம்பித்தேன். இறைவன் சிறு வயதில் நல்ல குரல் வளத்தையும் எனக்குக் கொடுத்திருந்தார். கர்னாடக இசையிலும் நல்ல ஆர்வம் இருந்ததால் பக்தி பரவசத்தோடு நிறைய பாடல்களைப் பாடுவேன். இவை எல்லாமே என்னை ஆன்மீகத்தில் அதிகமாக ஈடுபட வைத்தது. என்னுடைய புத்தக படிப்பு ஆர்வத்துக்குத் தீனி போட நான் பணியாற்றிய ஒவ்வொரு விமானப் படைத் தளத்திலும் ஒரு தமிழ் லைப்ரரியை அனைவரின் ஒத்துழைப்போடு ஆரம்பித்து விடுவேன். இப்படி டில்லி, ஆக்ரா, ஜோத்பூர், ஷில்லாங், கும்பிர் கிராம் (நாகாலேண்டு) போன்ற பல இடங்களில் தமிழ் லைப்ரரியை ஆரம்பித்து அநேக புத்தகங்களை வாங்கி, அந்த லைப்ரரியில் வைத்துள்ளேன்.

தில்லி தமிழ் சங்கத்தில் ஒரு ஆக்டிவ் மெம்பராக நான் இருந்தபடியால் அங்கிருந்த தமிழ் லைப்ரரியில் ஒரே தலைப்பில் இருந்த ஒன்றுக்கு மேற்பட்ட பல புத்தகங்களை அவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று விமானப்படை லைப்ரரியை பலப்படுத்தி இருக்கிறேன். அப்போது ஆன்மீக சம்பந்தமாக அநேகம் புத்தகங்களை படித்திருக்கிறேன். ஆனாலும் எனக்கு அதில் ஒரு நிறைவு இல்லாமலே இருந்தது. அதன் அர்த்தங்கள் எனக்கு முழுமையாகப் புரியவில்லை. அவைகளைப் படித்த பின்பு என் உள்ளத்தில் எழுந்த பல கேள்விகளுக்கு எனக்கு பதில் கிடைக்கவில்லை. ஏனென்றால் பாவ நிவாரண பலியைப் பற்றியும், இறைவனே பலியாக அவதாரம் எடுக்கணும் என்பது போன்ற பல வி ஷயங்கள் இந்து சமயத்தில் இல்லாத விஷயங்கள். ஆகவே எனக்கு அவைகள் முரண்பாடாகப் பட்டன. ஆகவே தெளிவில்லாமல் இருந்தேன்.

பிறகு நான் கிறிஸ்துவுக்குள் வந்து பைபிள் படித்த பிறகுதான் எனக்கு இந்து மத வேதங்களில் கூறப்பட்டுள்ள முன்பு விடை கிடைக்காத பல விஷயங்களுக்கு எனக்கு விளக்கம் கிடைத்தது. ஆக இப்போது புதிய ஆர்வத்துடன் பல இந்துமத வேதங்களை ஆராய ஆரம்பித்ததின் விளைவுதான் நான் எழுதிய பல புத்தகங்கள். அப்படி நான் தெரிந்து கொண்ட பல விஷயங்களை அதன் விளக்கத்தோடு சுருக்கமாக கீழே தருகிறேன். இன்னும் விளக்கமாக தெரிந்து கொள்ள என்னுடைய புத்தகங்களைப் படியுங்கள். இவைகள் நம் அருகில் உள்ள இந்துக்களுக்கு, சுவிசேஷத்தை அறிவிக்கும்போது எடுத்துக் கூற உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்.

அக்கம் பக்கத்தில், கூட வேலை பாக்குறவங்ககிட்ட, கொஞ்சம் தெரிஞ்சவங்க, பழகுனவங்ககிட்டே சுவிசேஷத்தை அறிவிக்கிறதுக்கு முன்னாடி அவங்களைப் பத்தி ஒரு சின்ன ஸ்டடி, வெரிஃபிகேஷன் பண்ணுங்க. அவங்களுக்கு ஏதாவது பிரச்சனை, கடன் தொல்லைகள், குடும்பத்தில் சமாதானக் குறைவு, பிள்ளைகள் சரியில்லை, பொண்ணுக்கு திருமணம் ஆக மாட்டேங்குது, குழந்தை பாக்கியம் இல்லை, உறவினர்களோட சண்டை, வீட்ல் யாருக்காவது உடல் நிலை சரியில்லை என்பது போன்ற பிரச்சனைகள் ஏதாவது இருக்கான்னு கொஞ்சம் கண்டுபிடியுங்க. அப்படி இதுபோல ஒரு குறிப்பிட்ட பிரச்சனையினால முன்னாடி கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்த ஒரு ஃபேமிலி இயேசு கிட்ட வந்தப் பிறகு இப்ப எப்படி பிரச்சனை தீர்ந்ததுன்னு எடுத்துச் சொல்லுங்க. அவங்க வீட்டிலேயே அந்த பிரச்சினைக்காக உண்மையிலேயே பாரப்பட்டு ஜெபம் பண்ணுங்க. அது அவர்களின் இருதயத்தைத் தொடும்.

விதவையா கிறிஸ்துவுக்குள் வரவேண்டாம்

இந்து சகோதர சகோதரிகள் இயேசு கிறிஸ்துவை ஏத்துக்கிறதுக்கு இன்னொரு பெரிய தடை என்னன்னு தெரியுமா? கிறிஸ்துவுக்குள் வந்த உடனேயே பூவை எடுத்திடு, பொட்டை அழிச்சிடு, தாலியை, நகையைக் கழட்டிடு, வெள்ளைச்

சேலையை கட்டுன்னு சொல்லுவோம். இதுக்கு பயந்துக்கிட்டே நெறையப் பேர் வரத் தயங்குறாங்க. அவங்க தயங்குறதுலேயும் ஒரு நியாயம் இருக்கு. இதெல்லாம் நம்ம நாட்டில யாரு செய்வாங்க? புருஷனை சாகக் கொடுத்த விதவைகள் செய்வாங்க. கிறிஸ்துவுக்குள்ள வரும்போதே, நீ அமங்கலமா வான்னு சொன்னா யாராவது வருவாங்களா? பேரை மாத்து, வாசல்ல கோலம் போடக் கூடாது, சாணி தெளிக்கக் கூடாது, வீட்ல இருக்கிற சாமி படத்தை எல்லாம் கழட்டி எறி. இறந்து போன அப்பா, அம்மா இவங்க போட்டோவை எல்லாம் எடுத்துடுன்னு சொல்றது எவ்வளவு பெரிய பிரச்சனைகளைக் கொண்டு வரும் தெரியுமா?

சில வீடுகள்ல எல்லாரும் ஒரே சமயத்தில் இரட்சிக்கப்பட மாட்டாங்க. குடும்பத்தில் இருக்கிறவங்கள்ல முதல்ல ஒருத்தர் ரெண்டு பேர் இரட்சிக்கப்படுவாங்க. அவங்க வீட்ல இருக்கிற இறந்து போன அப்பா, அம்மா படத்தை அகற்றினாலோ, சாமி படங்களை எடுத்திட்டாலோ குடும்பத்தில தேவையில்லாத பிரச்சனைகள், மனஸ்தாபம், கோபம், வெறுப்புத்தான் வரும். இதுமாதிரி சமயங்களில் நாம ரொம்ப ஞானமா செயல்படணும். ஞானமா அவங்களை வழி நடத்தணும்.

வீட்டுல குத்துவிளக்கு ஏற்றப்படாது, ஊதுபத்தி ஏத்தப்படா துன்னு கண்டிஷன் போடுறோம். இதெல்லாம் நம்மோட தமிழ் கலாச்சாரம். கிறிஸ்துவை ஏத்துக்கிடணும்கிறதுக்காக நம்மோட கலாச்சாரத்தை விடணும்னு அவசியம் இல்லையே.

ஐரோப்பிய கிறிஸ்தவ கலாச்சாரம் வேண்டாம்

கிறிஸ்தவமோ, பைபிளோ, இயேசுவோ எந்தவொரு தனிப்பட்ட கலாச்சாரத்தையும் போதிக்கலை. வெறும் யூத கலாச்சாரத்தை மட்டும் பைபிள் போதிச்சு இருந்தா கிறிஸ்தவம் இன்னிக்கு உலகம் முழுக்க பரவி இருக்காது. கிறிஸ்தவத்துக்கு எந்தக் கலாச்சாரமும் கிடையாது. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பிரிட்டிஷ் மிஷினெரிகள், ஐரோப்பிய மிஷனரிகள் கொண்டு

வந்த அந்த ஐரோப்பிய கிறிஸ்தவத்தை அதன் கலாச்சாரத்தோடே அப்படியே நாம பிடிச்சுக்கிட்டோம். அதுனால வந்த விளைவுதான் இது! அந்தக் காலத்தில் இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் போட்டுக்கிட்டு இருந்த டிரஸ்களையா நாம போடுறோம்? குளிர் பிரதேசத்தில் இருக்கிற கிறிஸ்தவர்கள் கோட்டு சூட்டு போட்டுக்கிட்டு டை கட்டிக்கிட்டாங்க. நம்ம தேசத்தில் வேர்த்து விறுவிறுத்து புழுங்கிக்கிட்டு இருக்கோம். இங்கே நம்ம கிளைமேட்டுக்கு இந்தக் கோட்டு சூட்டு எல்லாம் அவசியமா?

வெண் வஸ்திரம் தப்பில்லை

எல்.கே.ஜி., யூ.கே.ஜி. ஹை ஸ்கூல், தொழிற்சாலைகள், ஹோட்டல்ஸ், ஹாஸ்பிட்டல்ஸ் என்று எல்லா இடத்திலேயும் யூனிஃபாரத்தை யூஸ் பண்றாங்க. அதே மாதிரி கருப்பு டிரஸ், சிகப்பு டிரஸ், காவி உடை என்று கோயிலுக்கு போறவங்க போட்டுக்கிட்டு போறாங்க. அதுபோல மஹா பரிசுத்தமுள்ள தேவனை ஆராதிக்கிறதுக்கு வெள்ளை சேலை, டிரஸ் போடுறதில தப்பு ஒண்ணும் இல்லை. ஆனா இதை ஆரம்பத்திலேயே அவங்ககிட்டே சொல்ல வேண்டாம். கிறிஸ்துவுக்குள் வளர வளர பூவை எடுக்கிறது, பொட்டை எடுக்கிறதை, வெள்ளைச் சேலை கட்டுறதை தப்பா நினைக்க மாட்டாங்க. இதையெல்லாம் எடுக்கிறதை ஒரு டாக்டரினா முதல்லேயே சொல்லாம இருக்கிறது நல்லது. ஞானஸ்நானம் கொடுக்கிறதுக்கு இதை ஒரு கண்டிஷனா போடாம இருக்கிறது நல்லது.

குடும்பத்தில் ஒரு சிலர் மட்டுமே இரட்சிக்கப்பட்டு மத்தவங்க இரட்சிக்கப்படாம இருக்கும்போது, வரக் கூடிய பிரச்சினைகளை எப்படி சமாளிக்கிறது என்பதை 'கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்' என்ற ஒரு புத்தகத்தில் எழுத தேவன் கிருபை தந்துள்ளார். அதைப் படித்துப் பாருங்கள்.

யூதனுக்கு யூதனைப் போல்...

என்னைக் கேட்டா நம்மைச் சுற்றி இருக்கிற 80 முதல் 85% இந்து சகோதரர், சகோதரிகளிடம் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு

தேவையான வேண்டிய ஆதாரங்கள் இந்து மத வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்களிலேயே நிறைய இருக்கின்றன. அத்தனே பட்டிணத்தில் பவுலடிகள் **'அறியப்படாத தேவனுக்கு'** என்கிற ஒரு அறிவிப்பு பலகையை பார்த்துவிட்டு **'நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற தேவனை உங்களுக்கு அறிமுகப்படுத்த வந்துள்ளேன்'** என்று ஆரம்பித்து சுவிசேஷத்தை அறிவிக்கிறார். இந்து சகோதரர்களிடம் எங்க பைபிள்ல இப்படி எழுதி யிருக்குன்னு நாம போயி சொன்னோம்னா உங்க பைபிளை நீங்களே வச்சுக்கோங்க. எங்களுக்கு எங்க பகவத் கீதை இருக்கு. இன்னும் எங்களுக்கு அநேக வேதங்கள் இருக்குன்னு சொல்லுவாங்க. அவங்க பகவத் கீதையிலேயே, வேதங் களிலேயே என்ன எழுதியிருக்குன்னு நாம எடுத்துச் சொன்னோம் என்றால் அவங்களால எந்தப் பதிலுமே சொல்ல முடியாது. ஏன்னா அவங்க வேதங்களிலே அவங்களுக்குத் தெரியாத பல விஷயங்களை நாம எடுத்துச் சொல்லும்போது அவங்களால எதுவுமே பேச முடியாது. இதை என் சொந்த அனுபவத்தில் நான் சொல்லுகிறேன்.

இந்துக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க இது மிகவும் மிக எளிதான வழி. இதைத்தான் **'யூதனுக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும், பலவீனர்களுக்கு பலவீனரைப் போலவும் எல்லோருக்கும் எல்லாமும் ஆனேன். எப்படியாவது ஒருசிலராவது இரட்சிக்கப்படும்படி அப்படி ஆனேன்'**னு பவுல் அப்போஸ்தலர் 1 கொரி 9:20-23ல கூறியிருக்கிறார். அதற்காக இரவு பகலாக படித்து ஆராய்ச்சி செய்து பல புத்தகங்களில் பல விஷயங்களை எழுதும்படி தேவன் கிருபை தந்தார். அவைகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே புத்தகத்தில் அனைவருக்கும் பிரயோஜனப்படும் படியாக இங்கே தருகிறேன். கொஞ்சம் சிரமம் எடுத்தால் நாம் இவைகளை எளிதாக மனப்பாடம் செய்து கொள்ள முடியும். இவைகள் எல்லாமே இந்துக்களுக்கு நாம் சுவிசேஷத்தை அறிவிக்க மட்டுமே. அவர்கள் கிறிஸ்துவுக்குள்ள வந்த பிறகு நம்முடைய பைபிள் டீச்சிங்தான் அவர்களுக்குக் கொடுக்கணும்.

பிரச்சனை இல்லாத மனிதர்களே இல்லை

மனிதர்களாகப் பிறந்த எல்லோருக்குமே பிரச்சனைகள், கஷ்டங்கள், சுகவீனம், பலவீனம், நிம்மதி இன்மை, சந்தோஷமின்மை, வேலை ஸ்தலத்தில் இழுபறி, மனைவி, பிள்ளைகள், கணவன் சரியில்லை, நம்மை மற்றவர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லையே என்கிற ஆதங்கம், கவலை என இப்படி பல விதமான குறைகள் இருக்கவே செய்கின்றன. அவர்கள் யாராக இருந்தாலும் சரி, படிச்சவனோ, படிக்காதவனோ, பணக்காரனோ, ஏழையோ, பக்தி உள்ளவனோ, நாஸ்தீகனோ, கிறிஸ்தவனோ, முஸ்லீமோ, ஆர்சியோ, சி.எஸ்.ஐ.யோ, யாராக இருந்தாலும் அனைவருக்கும் பிரச்சனைகள் இருக்கு. பிரச்சனை இல்லாத மனுஷனே இந்த உலகத்தில் இல்லைன்னு சொல்லலாம்.

இவைகளுக்கு ஒரு தீர்வு, இவைகளிலிருந்து ஒரு பரிபூரண விடுதலை, சந்தோஷம், சமாதானம், எல்லோருக்கும் தேவைப்படுது. அது எங்கே கிடைக்கும்னு தெரியாமத்தான் கோயில் கோயிலா, குளம் குளமாப் போறாங்க. இந்த சாமியைக் கும்பிட்டா பிரச்சனை தீர்ந்திடாதா? அந்த சாமியைக் கும்பிட்டா கஷ்டம் போயிடாதா? விரதம் இருந்து இருமுடி எடுத்துக்கிட்டுப் போனா நோய் தீர்ந்திடாதா? கிரிவலம் வந்தா, மொட்டை போட்டா, பாலாபிஷேகம் பண்ணினா நிம்மதி கிடைச்சுடாதா? அங்கப்பிரதோஷணம், தீ மிதித்தல், அலகு குத்திக்கிடுறது, பொங்கலிடுவது, கலச விளக்கு வேள்வி பூஜை பண்றது, மந்திர உச்சாடனம் பண்றது, ராஜயோகா, குண்டலினியோகா பண்றது, கங்கை யமுனை சரஸ்வதியில நீராடுதல் இப்படி பலவற்றை ட்ரை பண்ணுகிறார்கள். எதுலையாவது பிரச்சனை தீர்ந்திடாதான்னு ஓடுறாங்க.

எல்லாப் பிரச்சனைக்கும் மூலம் வேண்டும்

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணம் என்னன்னு தெரியாமலேயே தீர்வைத் தேடி அலையுறாங்க. மனிதர்களோட எல்லா பிரச்சினைகளுக்கும் காரணமே அவங்களோட

பாவந்தான். பாவத்தில் இரண்டு டைப் இருக்கு. ஒண்ணு 'ஜென்ம பாவம்'. அவங்க அப்பா, அம்மா, தாத்தா பாட்டி செய்த பாவங்கள். அப்படியே பரம்பரை பரம்பரையா இரத்தத்திலேயே தொடர்ந்து வருது. இதை 'சகலமலம்'னு இந்து மதம் கூறுகிறது. இரண்டாவது இப்போ நாம செஞ்ச பாவங்கள். 'கர்ம வினை'ன்னு சொல்லுவாங்க. இந்த இரண்டு டைப் பாவங்களும் நம்ம எல்லார்கிட்டேயும் இருக்குது. இவைகள்னாலதான் நம்ம வாழ்க்கையில சகலவிதமான துன்பம், துயரம் எல்லாமே. **'உங்கள் பாவங்களே தேவன் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது'**ன்னு ஏசாயா 59:1 சொல்லுது.

நாம நெனச்சுக்கிட்டு இருக்கோம். திருடினாப் பாவம், கொள்ளையடிச்சாப் பாவம், கொலை பண்ணினாப் பாவம், ஒரு பெண்ணைக் கற்பழிச்சிட்டா பாவம், நம்பிக்கைத் துரோகம் பண்ணினா பாவம், இதுபோல பெரிசா இருக்கிறதைத்தான் பாவம்னு நாம நினைக்கிறோம். ஆனா இறைவனோட பார்வையில எதெல்லாம் பாவமா இருக்குன்னு நான் பரிசுத்த வேதாகமத்தில் பார்த்துட்டு அப்படியே ஆடிப் போயிட்டேன்.

ஏன்னா, ஆண்டவரோட பார்வையில எது எதெல்லாம் பாவமா தெரியுதோ அதையெல்லாம் நாம எல்லாருமே கொஞ்சங் கூட அந்த நினைப்போ, பயமோ இல்லாம, அசால்ட்டா, கேர்ஃப்ரியா, தினமும் செஞ்சுக்கிட்டு இருக்கோம். கோயிலுக்கு, சர்ச்சுக்கு, மசூதிக்கு போயிக்கிட்டே அன்றாடம் செய்யுறோம். தப்பு பண்றோம், பாவம் செய்யுறோம், இது தேவனுக்குப் பிடிக்காதுன்னு தெரியாமலேயே, உணர்வு இல்லாமலேயே செய்யுறோம். ஏன்னா இதுவரைக்கும் நாம சார்ந்து இருந்த மதமோ, ஆன்மிகமோ, படித்த வேதங்களோ, எதுவுமே ஆணித்தரமா இதையெல்லாம் பாவம்னு சொல்லவே இல்லை. அதுதான் கொடுமை.

இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பில்லை

புறஜாதி மக்கள் என்ன நினைக்கிறாங்கன்னா, அவங்க

கும்பிடுற தெய்வங்க அவங்க கஷ்டங்களைப் போக்கிடும்னு நம்பி போறாங்க. கஷ்டங்கள் தீருகிறது இல்லை. காரணம் அவங்களோட பாவங்கள் இன்னும் போக்கப்படலையே. அவங்க பாவங்களைப் போக்குகிற சக்தி அவங்க கும்பிடுற தெய்வங்களுக்கு இல்லைங்கிறது அவங்களுக்குத் தெரியலை. அது தான் பிராபளம். அவங்க தெய்வம்னு நினைச்சு கும்பிடுகிறவைகளால அவங்க பாவங்களை கழுவ முடியாது. ஏன்னா **'இரத்தப் பிரதோஷணம் பாப விமோசனம்'**னு சம்பூர்ண மஹாபாரதம் சொல்லுது. தாண்டீய மஹாபிரமாணம் சொல்லுது. பிரம்ம சூத்திரம் சொல்லுது, பிருஹதாரணி உபநிஷத்து, சாந்தோக்கிய உபநிஷத்து, புருஷ சூக்தம் எல்லாமே சொல்லுது. அதாவது இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பு இல்லை. இவைகள் எல்லாமே இந்து மத வேதங்கள்தான். ஆனா இது எத்தனை பேருக்குத் தெரியும்? அதுமட்டுமில்லாம இவங்க கும்பிடுற எந்த தெய்வம் இரத்தம் சிந்தியிருக்கு? எந்த தெய்வமும் மனுஷருக்காக, அவங்க செஞ்ச பாவங்களுக்காக, பாவ விமோசனத்துக்காக இரத்தம் சிந்தலையே.

உண்மையை சொல்லப் போனா அவைகள் பாவத்தையே மன்னிக்கலையே. பாவிகளையும் மன்னிக்கலையே. பாவிகளை அதம் பண்ணவும், அழிக்கவும், கொல்லுவதற்குமே அவைகள் அவதாரம் எடுத்ததாக இந்துமத வேதங்கள், புராணங்கள் எல்லாமே சொல்லுதே.

இந்து தெய்வங்கள் பாவத்தை மன்னிக்கவில்லை

அதுக்கு எத்தனையோ உதாரணங்களை எடுத்துச் சொல்ல முடியுமே. சூரசம்ஹாரம், நரஹாசுரவதம், பத்மாசுர வதம், ஹிரண்ய வதம், கம்ச வதம், தசாவதாரம் எல்லாமுமே பாவிகளை அழிக்கத்தானே ஒழிய, பாவ விமோசனம் கொடுக்கிறதுக்கு இல்லையே. பாவத்தை வெறுத்து, பாவிகளை நேசித்தவர் இயேசு கிறிஸ்து ஒருத்தர் மட்டும்தானே. அந்தப் பாவங்களைப் போக்க, அதற்குரிய தண்டனைகளை தாமே தம்மேலே ஏற்றுக் கொண்டு, இரத்தம் சிந்தி பாபவிமோசனம் கொடுத்தது இயேசு கிறிஸ்து

ஒருத்தர் மட்டும்தானே. **'இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்'**னு 1 யோ 1:7 சொல்லுதே. **'வானத்தின் கீழே பூமியின் மேலே அவருடைய நாமமே அல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவில்லை'**ன்னு பரிசுத்த வேதாகமம் (அப் 4:12) தெள்ளத் தெளிவாக சொல்லுதே. இதை பைபிள் மாத்திரமல்ல, இந்துமத வேதங்களும், வேதாந்தங்களுமே சொல்லுது. சித்தர்கள், ஞானிகள் எல்லாருமே சொல்றாங்க. இதை எடுத்துச் சொன்னா அவங்களால எந்த மறுப்பும் சொல்ல முடியாது.

மதம் மாறத் தேவையில்லை

இதுக்காக நீ மதம் மாறணும்கிற அவசியம் இல்லைப்பா, மனம் மாறு. பாவ வாழ்க்கை பாவ சிந்தனையில் இருந்து மனம் மாறு. இயேசுவை உன் இருதயத்தில் ஏத்துக்கோ. இதுவரைக்கும் செஞ்ச பாவங்களை அறிக்கையிடு. அவைகளுக்காக உண்மையிலேயே பாரப்பட்டு மனங் கசந்து அழு. இயேசு கிறிஸ்துகிட்ட முறையிடு. 'ஆண்டவரே! உம்முடைய இரத்தத்தாலே என் பாவங்களைக் கழுவி என்னை சுத்திகரியும்'னு கதறு. நீ என்ன பாவங்கள் செஞ்சு இருந்தாலும் அவைகளை ஆண்டவர் மன்னிச்சிடுவாரு.

இதுவரைக்கும் நீ செஞ்ச பாவங்களுக்கு உனக்கு மன்னிப்பு கிடைச்சிடுச்சு. இனிமே எந்தப் பாவமும் செய்யாதிருக்க, தினமும் பைபிளைப் படி. பைபிள் கிறிஸ்தவர்களோட வேத நூல் மாத்திரமல்லை. இந்த உலகத்தில் பிறந்த எல்லாரும் வாசிச்சுக் கடைப்பிடித்து அதன் பிரகாரம் நடக்க வேண்டிய வழிகளைச் சொல்லுகிற ஒரே அற நூல், நீதி நூல் அது. இது எல்லாருக்கும் உரியது. நீ படிச்சவன்தானே, இதைப் படிச்சுப் பாரு. அதுல உன்னை மதம் மாறச் சொல்லி எழுதப்படலை. மனம் மாறுன்னு தான் எழுதியிருக்கு.

பரிசுத்த வேதாகமத்துக்கு ஈடு இணை இந்த உலகத்தில எதுவுமே இல்லையின்னு ஆதாரப்பூர்வமா நிரூபித்து, அதை எதிர்த்தவங்கள்லாம் கடைசியில அதுவே சத்திய வேதம்னு ஏற்றுக் கொண்டதை எல்லாம் புரூஃப் பண்ணி 'அரிய வேதம்

அறிய வேதம்'னு ஒரு புக்கே எழுதியிருக்கிறேன். இன்றைய விஞ்ஞானத்துக்கு அடிப்படை, பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரம் பைபிளே என்று நிரூபித்து 'விஞ்ஞானமும் விவிலியமும்'னு எழுதின நூலை படிச்சுப் பாருங்க. பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொன்னும் இதுவரைக்கும் அப்படியே நிறைவேறியிருக்குன்னு ஆதாரப்பூர்வமா நிரூபிச்சு இரண்டு பாகமாக 'நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்'னு எழுதியுள்ளதை படிச்சுப் பாருங்க. இதுவரை நடந்தது, நடக்கிறது, நடக்கப் போறது எல்லாத்தையும் சொல்ற ஒரே புத்தகம், அற நூல் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே. ஆண்டவராகிய பரிசுத்த ஆவியானவர் ஏவுதலில் எழுதப்பட்ட இந்த சத்திய வேதத்தை எதிர்த்தா, அதைப் போதிக்கின்ற திருச்சபையையோ, போதகரையோ, ஊழியக்காரனையோ, கிறிஸ்தவத்தையோ எதிர்த்தா என்ன கதி ஆகும்னு 'கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு'ன்னு ஒரு புத்தகமும் எழுதியுள்ளேன். இவைகளை படிச்சுப் பாருங்க. அப்புறம் தெரியும் இதுவே நம்மைப் பண்படுத்தும், பக்குவப்படுத்தும், புடமிடும், பரிசுத்தப்படுத்தும், பரலோகம் அழைச்சிட்டுப் போற வழி காட்டுற ஒரே நீதி நூல்னு தெரியும்.

பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைக்கணும்

அதுக்கப்புறம் கூடிய சீக்கிரமே ஞானஸ்நானம், கங்காஸ்நானம், ஜல தீட்சை எடுத்திடு. மறுபடியும் சொல்றேன். இது உன்னை கிறிஸ்தவனா மாத்தறதுக்கு இல்லை. இதனால நீ பாவத்துக்கு மரிச்சு, நீதிக்கு பிழைச்சு மறுபடியும் பிறக்கிறே. இதைத்தான் பிராமிணர்கள் உபநயனம், பூணூல் போடறதுன்னு சொல்றா.

ஞானஸ்நானத்தினாலே நம்மையெல்லாம் படைச்ச அந்த சர்வேஷ்வரனின் பிள்ளையா மாறுறீங்க. பிறகு வாரத்தில ஒரு நாள், சண்டே அன்னிக்கு உனக்கு பக்கத்தில் இருக்கிற ஒரு ஆவிக்குரிய சர்ச்சுக்குப் போ. அங்க இருக்கிறவங்கல்லாம் யாருன்னு பாரு. எல்லாருமே இந்து மார்க்கத்திலிருந்து வந்தவங்கதானே. ஏன் வந்தீங்க? ஏன் இருக்கீங்கன்னு கேளு.

அவங்க என்னு சொல்லுவாங்க. அதுக்கப்புறம் நீ டிசைட் பண்ணு இந்த இயேசு உனக்கு வேணுமா வேண்டாமான்னு. அதுவுமில்லாம அங்க சொல்லப்படுற செய்தி, பிரசங்கம் உன்னை கெடுக்கக் கூடியதா இருக்குதா? பிரயோஜனமா, உன்னை பண்படுத்தக் கூடியதா இருக்கான்னு பாரு. நீ எல்லாம் படிச்சவன்தானே. உன்னை யாராவது சாக்குலேட் கொடுத்து ஏமாத்த முடியுமா? சொல்லுன்னு ரொம்பப் பக்குவமா, ஞானமா, பொறுமையா, அன்போட, ஜெபத்தோட எடுத்துச் சொல்லுங்க. கண்டிப்பா இப்படி சொல்லுறது அவங்களை அசைக்கும், திங்க் பண்ண வைக்கும்.

இன்னும் இரட்சிக்கப்படாதவங்க அவங்க வீட்ல இருந்தா, ஞானஸ்நானம் எடுக்கிறதைக் குறிச்சு யார்கிட்டேயும் அவங்க சொல்லிட்டு எடுக்கணும்கிற தேவை இல்லை. இது அவங்களுக்கும் ஆண்டவருக்கும் ஏற்படுகிற ஒரு தனிப்பட்ட உடன்படிக்கை. இதுக்கு யாரோட பெர்மிஷனும் தேவையில்லை. இரகசியமாகவே எடுத்துக்கிறது ஆரம்பத்துல நல்லது.

பய பக்தியோட வா

பத்து வாரம் ஞாயிற்றுக்கிழமை அன்னிக்கு சர்ச்சுக்கு போயிப் பாரு. குளிச்சு முழுகி, ஈரத் தலையோட, வாயில ஒரு சொட்டு தண்ணி கூட ஊத்தாம விரதம் இருந்து காலில் செருப்பு போடாம, பயபக்தியோட போயி அங்கே முழங்கால் போட்டு உன் பிரச்சனைகளை ஆண்டவர்கிட்டே சொல்லு. பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்குதா இல்லையான்னு பாரு. '**என்னை சோதித்துப் பாருங்கன்னு சொன்ன ஒரே தேவன் இயேசு கிறிஸ்து ஒருத்தர் மாத்திரம்தான்.** டெஸ்ட் பண்ணிப் பாரு'ன்னு சொல்லுங்க. நீ காசு பணம் கொடுக்க வேண்டாம். மதம் மாற வேண்டாம். உன் இருதயத்தை மாத்திரம் கொடு. பத்து வாரம் வந்து பாரு. பத்து வாரம் தொடர்ந்து வந்தான்னாலே அவனுக்குள்ள சத்தியம் போயிடும். அதுக்கப்புறம் அவன் எங்கேயும் போக மாட்டானே.

அப்பெல்லோவாயிருந்து நீர் பாய்ச்சுங்க

இந்த பத்து வாரத்தில வாரம் இரண்டு நாளாவது அவங்க வீட்டுக்கு போங்க, போயி ஒரு அரை மணி, முக்கால் மணி நேரம் மாத்திரம் இருங்க, அரசியல், சினிமா, அடுத்தவங்களைப் பத்தி எதுவுமே பேசாதீங்க. ஒரு பாட்டுப் பாடி, ஒரு சங்கீதம் வாசிச்சு, ஒரு சாட்சியைச் சொல்லி அவங்களுக்கு நல்லா ஒரு ஜெபம் பண்ணிட்டு வாங்க. யாரைப் பத்தியும் தெரியாமக் கூட ஒரு வார்த்தை தப்பாவோ, குறையாவோ பேசிடாதீங்க, உண்மையான கிறிஸ்தவ அன்பை, சாயலைக் காட்டுங்க. **'நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படிக்கு உபதேசம் பண்ணுங்கள்'**னு வேதம் சொல்லுதே. அதை ஞானமா செய்யுங்க. தொடர்ந்து அவங்களோட இரட்சிப்புக்காக கண்ணீரோட, பாரத்தோட ஜெபம் பண்ணுங்க. **'கண்ணீரோட விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள்'**னு சங் 126:15 சொல்லுதே.

இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து

இறைவன் தாம் படைத்த மனுக்குலத்தை மீட்பதற்காக, மனித அவதாரம் எடுத்து வருவார், நமக்காக பலியாகி, பாவ விமோசனம் தருவார் என்பதையும், பாவம் எப்படி மனுக் குலத்திற்குள் நுழைந்தது என்பதை விளக்கும் பாடல்களை இந்துமத வேதங்களில் பார்ப்போமா? இந்த பாடல்களை எனது பல்வேறு புத்தகங்களில் ஏற்கனவே எழுதியிருந்தாலும், அவைகளை ஒரே இடத்தில், ஒரே புத்தகத்தில் காணும்படியாக தற்போது எடுத்து எழுதியுள்ளேன். இது உங்களுக்கு மனப்பாடம் செய்யவோ, எடுத்துக் கையாளவோ மிகவும் எளிதாக இருக்கும் என்கிற எண்ணத்தில் இப்படி எழுதியுள்ளேன்.

1. மனித வர்க்கத்திற்குள் பாவம் எப்படி நுழைந்தது என்பதை மெய்கண்டார் சிவ ஞான போதத்திலும் (முதல் சூத்திரம்), திருவயலூர் உய்ய வந்ததேவர் திருவுந்தியாரிலும் (41வது பாடல்) எப்படி பாடியிருக்கிறார்கள் எனப் பாருங்கள்.

> 'அவன் அவள் அது எனும் போற்றிய திதியே
> ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்'

பொருள்: அவன் (ஆதாம்), அவள் (ஏவாள்), அது (இந்த உலகம்) மூன்றையும் இறைவன், மூன்று விதமாகப் படைத்தார். ஆதாமை மண்ணினாலும், ஏவாளை அவன் விலா எலும்பிலிருந்தும், இவ்வுலகை வார்த்தையினாலும் படைத்தார். 'ஒடுங்கி மலத்துளதாம்' - அப்போது அவைகள் தூய நிலையில் இருந்தன. பின் அவைகள் ஒடுங்கி பாவத்தில் விழுந்தன. (எப்போது? ஏதேன் தோட்டத்தில் உண்ண வேண்டாம் என்று சொல்லப்பட்ட கனியை புசித்ததினால்). 'அந்தம் ஆதி' - அது தூய நிலையின் அந்தமும் (அதாவது பாவமே இல்லாத நிலையின் முடிவும், பாவ நிலையின் தொடக்கமும் ஆயிற்று). 'என்மனார் புலவர்' - என அறிஞர்கள் கூறுகின்றனர்." பரிசுத்த வேதாகமத்தின் ஆதியாகமத்தை மெய்கண்டார் இரண்டே வரிகளில் கூறிவிட்டார்.

2. அதையே திருவுந்தியாரில் எப்படி சொல்லப்பட்டு இருக்கிறது பாருங்கள்.

> 'முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடி படர்ந்தது
> அத்தி பழுத்தது என உந்தீபற.
> அப்பழம் உண்ணாதே உந்தீபற'

பொருள்: முக்தி நிலையாகிய இன்ப நிலையில் இருக்க வேண்டி படைக்கப்பட்ட முதல் கொடியில் அதாவது ஆதாமில் - மோகமாகிய பாவக் கொடி படர்ந்தது. எப்போது? உண்ணாதே என்று சொல்லப்பட்ட கனியை அவன் உண்டபோது.

3. 'ஓம்' என்கிற ப்ரணவ நாமத்தின் (வார்த்தை) மூலம் இப்பிரபஞ்சம் படைக்கப்பட்டது என இந்து மதம் கூறுகிறது. அதாவது வார்த்தையால் இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டது எனக் கூறுகிறது. 'ஆம்' என்றும் 'ஆமென்' என்றும் பரிசுத்த

வேதாகமத்தில் கூறப்பட்டதையே இங்கு 'ஓம்' என்று கூறுகின்றனர். வார்த்தையினால் இந்த உலகத்தை இயேசு படைத்தார் என்று வேதம் கூறுகிறது. அவர் வார்த்தையாகவே இருந்தார். **'ஆதியிலே வார்த்தை இருந்தது அது தேவனோடு இருந்தது. அது தேவனாகவே இருந்தது'** என்று யோ. 1:1 கூறுகிறது. அப்படி **'வார்த்தையாக இருந்த தேவன் மாம்சமாகி (மனித அவதாரம் எடுத்து) நமக்குள்ளே வாசம் பண்ணும்படி இந்த பூமிக்கு வந்தார்'** என்பதை 'வாக்யோ பிரம்மா' என்கின்றனர்.

4. பிறப்பு இறப்பு இல்லாத இறைவன் நமக்காக மனிதனாகப் பிறந்து வந்தார் என்பதை உமாபதி சிவாச்சாரியார் போற்றி பஃறொடை (69)ல் பாடுகிறார்.

 'இறவா இன்பத்து எமை இருத்த வேண்டி
 பிறவா முதல்வன் பிறந்தான்'

5. இறைவன் மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்க மனித அவதாரம் எடுக்க வேண்டி வந்தது என்பதை நம்மாழ்வார் திருவிருத்தம் (1-9580) எப்படி கூறுகிறது பாருங்கள்.

 'மெய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
 இந்நின்ற நீர்மை இனியாம் உறவாமை உயிர் அளிப்பான்
 எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'

 பொருள்: கறைபட்ட ஞானமும், தவறான ஒழுக்கமும், அழுக்கு (பாவம்) நிறைந்த இந்த உடம்பும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு நல்லதோர் வாழ்வைத் தருவதற்காக இறைவன் ஒரு ஸ்திரீயில் பிறந்தார்.

6. இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த அந்த பரப்பிரம்மமே நமக்கு குருவாக வந்து இரட்சிப்பார் என்பதை **'குருரேவ பரப்பிரம்ஹ'** என்று கூறுவதோடு, அதை கௌதம விருத்தமும் விளக்கிக் கூறுகிறது.

 'ஆதி அந்த மில்லாத காலந்தனில்
 அநாதியாய் நின்றதுதான் பரமென்றாகும்

ஆதியந்தம் படைத்த பரன் மனுவோர்க்காக
அறியாத குருவென வந்தாண்டதாகும்'

பொருள்: அநாதிதேவன் மனுக்குலத்தை மீட்க, இரட்சிக்க குருவாக வந்து ஜனங்களை மீட்பார்.

7. **'உலகமெலாம் உய்ய வேண்டி உருக்கொண்டு மண்ணில் வந்தாய்'** என்று திரு.வி.க. கிறிஸ்துவின் அருள் வேட்டலில் பாடுகின்றார்.

இதையே நாலாயிரம் திவ்யப் பிரபந்தம் (இயற்பா இரண்டாம் திருவுந்தாதி - 24 - 3307)ல் கூறுகிறது.

'அவன் கண்டாய் நன்நெஞ்சே ஆரளும் கேடும்
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றாய் அவன் கண்டாய்'

பொருள்: மாசே (பாவமே) இல்லாத கடவுள் மாசுள்ள மனிதனின் பாவத்தைப் போக்கி மீட்பதற்காக ஐம்புலன்களை யும் உடைய மனிதனாக அவதரித்தார்.

இதுகாறும் வானத்தையும் பூமியையும் படைத்த அந்த சர்வ வல்ல தேவன் தாம் படைத்த மனுக்குலத்தை மீட்க மனித அவதாரம் எடுத்து வருவார் என்பதைப் பார்த்தோம். இப்போது மனுக்குலத்தின் பாவம் போக்க அவர் தம்மைத் தாமே பலியாகக் கொடுத்து மீட்பை உண்டு பண்ணுவார் என்பதைக் கூறும் பாடலைப் பார்ப்போம்.

9. மனித அவதாரம் எடுத்து வந்த இறைவன் பாவியர்களின் பாவம் போக்குவதற்காக தம்மையே பலியாகக் கொடுத்தார் என்று அப்பர் பெருமான் அப்பர் தேவாரம் 320ல் பாடுகிறார்.

'ஆவியாய் அவியுமாகி அருக்கமாய்ப் பெருக்கமாகிப்
பாவியர் பாவம் தீர்க்க பரமனாய் பிரம்மனாகி'

10. விநாயகர் அகவலில் ஔவையார் இறைவன் எப்படி பாவ வினை தீர்த்தார் என்று விளக்கமாகப் பாடுகிறார்.

'குரு வடிவாகிக் குவாயம் தன்னில்
திருவடி வைத்து திறம் இது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடு ஆயுதத்தால் கொடு வினை களைந்தே'

பொருள்: குருவாக அவதரித்து வந்த கடவுள் கோடு ஆயுதத்தால் அதாவது மரக் கொம்பால் ஆன ஒரு ஆயுதத்தால் அதாவது சிலுவையில் மனுக்குலத்தின் பாப வினை தீர்த்தார்.

11. தவறிப் போன ஆன்மாவை (மனிதனை) இறைவன் குருவாக உலகில் வந்து மீட்டுக் கொண்டார் என்பதை சிவஞான போதம் 8வது பாடல் இப்படிக் கூறுகிறது.

'ஐம்புல வேடரின் அயர்ந்தன வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே'

12. சர்வ ஜனங்களின் பாவ விமோசனத்திற்காக பாவப் பரிகாரியாக பிரஜாபதி பலியாக்கப்பட வேண்டும் என்று ரிக் வேதம் கூறுகிறது.

'யக்ஞம் பிரதாமணி தர்மணி
யக்னோவ புவனசய நாபிஹ
யக்னம் சுதர் மனோவ்
யக்னம் ப்ரதிஷ்திதம்
ருத்சயன பதயை அதி விஷ்வினிதுரிதா'

பொருள்: தர்மங்களிலெல்லாம் தலையாய தர்மம் பலியாகிய தர்மமே. அந்தப் பலியினால் மட்டுமே இப்பிரபஞ்சம் கேடடைந்த நிலையிலிருந்து விடுதலை அடையும்.

13. சாமவேதம் - தாண்டீய மஹாபிரமாணம் கூறுகிறது:

'பிரஜாபதிர் தேவப்பியம் ஆத்மனம்
யக்னம் க்ருத்துவ பிராயச்சித்'

பொருள்: தேவன் தம்மையே பலியாகக் கொடுத்து பாவ மன்னிப்பை சம்பாதிப்பார்.

14. தாண்டீய மஹா பிரமாணம் 2வது காண்டம் 7வது அதிகாரம் கூறுகிறது:

'சகஞ்ஞு பிரஜா சிருஷ்டுவ புரோவச்சா
பிராபதி அதினா பிரஷ்டி விஷ்துவ மேடிஒ
இஸ்பிக்கா மதுக'

பொருள்: சர்வத்தையும் படைத்த அந்த சர்வேஷ்வரன் தாம் படைத்த மனுக்குலத்தை மீட்க தம்மைத் தாமே பலியாகக் கொடுத்தார்.

15. இதையே **'ப்ராஜாபதிர் தேவப்பியம்'** என்று சாந்தோக்ய உபநிஷத் 3-16-1ம் கூறுகிறது.

பொருள்: பிரஜாபதியே பலியாக வேண்டும்.

16. ரிக் வேதம் கூறுகிறது

'ஆத்மதா பலதா யஸ்ய சாயாம்ருதம்
யஸ்யம் ரூத் யூஹி'

பொருள்: யாருடைய நிழலும், மரணமும் ஜீவாம்ருதமாகியதோ, அவரே தம்முடைய பலியின் மூலமாக ஆவியையும் பெலனையும் கொடுப்பார்.

17. ரிக் வேதத்தின் 2ம் பகுதியாகிய புருஷ சூக்தம் கூறுகிறது:

'நன்ய பதை அயனாய விதயதே'

பொருள்: பரம் பொருள் மூலமாக தம்மையே ஏக பலியாகக் கொடுத்த அந்த பிரம்மாவை அல்லாமல் மனிதர்கள் ஆயிரமாயிரம் நற்கிரியைகளைச் செய்தாலும் மோட்சத்திற்கு செல்ல முடியாது.

18. அதே புருஷ சூக்தம் மேலும் கூறுகிறது:

'யக்ஞே சஷபித கல்மஷ ஹ'

பொருள்: பிரஜாபதியாகிய இறைவனே பலியாக வேண்டும்.

19. திரு.வி.க. கிறிஸ்துவின் அருள் வேட்டலில் இறைவனை போற்றிப் புகழ்ந்து பாடுகிறார்.

'அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனே போற்றி போற்றி
மன்பதை பாவம் தீர்க்க மரித்தவா போற்றி போற்றி
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே போற்றி போற்றி
என்பிழை பொறுக்கும் இயேசு எந்தையே போற்றி போற்றி'

20. மகாகவி பாரதியாரும் மனம் மகிழ்ந்து பாடுகிறார்:

'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து உயிர்த்தனன் நாளொரு மூன்றில்
நேச மாமரியா மகதலேனா
நேரிலே இந்த செய்தியைக் கண்டாள்'

21. திருவள்ளுவரும் வேத குறட்பாவில் பாடுகிறார்:

'பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்'

பொருள்: பொறியாகிய கருவியில் (சிலுவையில்) தன்புலன்களை அவித்தவனாகிய (பலியாக்கியவனாகிய) இறைவன் (இயேசு) காட்டிய வழியில் நடப்பவன் நீடு வாழ்வு (நித்ய ஜீவனை) பெற்றுக் கொள்வான்.

22. நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தில் (1786) திருமழிசை ஆழ்வார் திருமுகம் மலரப் பாடுகிறார்:

வேதமாகி வேள்வியாகி (பலியாகி) விண்ணினோடு
மண்ணுமாய் ஆதியாகி ஆயனான மாயமென்ன மாயமே'

23. திருமந்திரம் முதல் மந்திரம் - உபதேசம் 1ல் திருமூலர் திருத்தமாகப் பாடுகிறார்:

'விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருகுகியோ ஒராப்பிலா ஆனந்தக்
கன்னின்று காட்டிக் களிப்பறுத்தானே'

பொருள்: பலியாகி பாவ வினையை ஈடு கட்டுவதற்காக இறைவன் ஊண் உடம்பு எடுத்து (மெய்கொண்டு) விண்ணிலிருந்து இழிந்து (இறங்கினார்)

24. பாவம் கழுவப்பட்டவர்கள் இறைவனோடு சேருவது பற்றி சிவஞான போதம் 12வது பாடல் இவ்வாறு கூறுகிறது:

'செம்மல் நோன்தாழ் சேரல் ஒட்டா
அம்மலம் கழி இ அன்பெராடு மரீஇ
மாமற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'

பொருள்: மனிதனுக்காக பலியானதால் ரத்தம் கொட்டிக் காட்சியளிக்கும் சிவந்த பாதங்களில் சேர விடாத பாவங்கள் கழுவப்பட்டவர்கள் இறைவனோடு நித்ய காலமாய் உறைந்திருப்பார்கள்.

பாவத்தை மன்னிக்கும் தெய்வம் இயேசு மட்டுமே

இன்னும் எத்தனையோ பாடல்கள், சமஸ்கிருத ஸ்லோகங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாமே இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து வந்ததையும், அவர் மனுக் குலத்தின் பாவங்களுக்காக தம்மையே பலியாகக் கொடுத்தார் எனவும் தெளிவாகக் கூறுகின்றன. இந்து மதத்தில் கூறப்படுகிற தெய்வங்களும் அவதாரம் எடுத்து வந்ததாக இந்து புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இதில் முரண்பாடு, வேறுபாடு என்னவென்றால், இயேசு கிறிஸ்து அவதாரம் எடுத்து பூமிக்கு வந்தது பாவிகளை மீட்க, அவர்களின் பாவங்களுக்கு பரிகாரியாக. ஆனால் புராணங்களில் கூறப்படும் இந்து தெய்வங்கள் அவதாரம் எடுத்து வந்தது பாவிகளை அழிக்க, அவர்களை சங்காரம் பண்ண, இதுதான் வித்தியாசம். இதைத்தான் மேற்கூறிய பாடல்கள் கூறுகின்றன. ஆகவே இந்தப் பாடல்களில் கூறப்பட்டு இருப்பது இயேசு கிறிஸ்துவைப் பற்றி மட்டுமே. இந்து மத தெய்வங்களை அல்ல என்பதை பக்குவமாக எடுத்துக் கூறுங்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எண்ணி மாளாத அற்புதங் களையும், அதிசயங்களையும், சுகத்தையும், பெலத்தையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையிலே செய்திருக்கிறார். இதையெல்லாம் சாட்சியா எடுத்துச் சொல்லுங்க. சர்ச்சுல எத்தனையோ சாட்சிகளை கேக்குறீங்களே. அவைகளை எல்லாம் இந்துக்களுக்கு சொல்லுங்க. அப்படி நீங்க சொல்லும்போது திருப்பதியிலேயும் அற்புதம் நடக்குதே, திருச்செந்தூரிலும் அதிசயம் நடக்குதேன்னு சொல்லுவதற்கு வாய்ப்பு உண்டு. பிசாசும் அற்புதம் செய்வான். ஆனா அப்படிச் சொல்லாதீங்க. அவங்க மனசு புண்படும். ரொம்ப பக்குவமா, ஞானமா, அவங்க மனசு புண்படாதபடி எடுத்துச் சொல்லுங்க. அதிசயங்கள் நடந்திருக்கலாம். ஆனா இப்போ ஏன் நடக்கலை? இயேசு கிறிஸ்துகிட்ட வந்து பாருங்க. நடக்குதா இல்லையான்னு பாருங்க. அடுத்து துன்பங்களுக்கு காரணமே பாவம்தான். அதை இயேசுவால் மாத்திரமே போக்க முடியும். அவர் ஒருத்தர்தான் நமக்காக் இரத்தம் சிந்தியிருக்கார்னு பார்த்தோமே. அதை இன்னொரு தடவை தெளிவா சொல்லுங்க.

உங்களுக்காக ஜெபிக்க ஒரு கூட்ட ஜனம் உண்டு

அடுத்து நீங்க கஷ்டப்படுற சமயத்தில ஊர் உலகம், சொந்த பந்தம் உங்களை கைவிட்டு இருக்கலாம். யார் கைவிட்டாலும் ஙக விடாத கர்த்தர் இப்போ உங்க கூட இருப்பாரு. அது மாத்திரமல்ல, உங்களுக்காக ஜெபிக்க ஒரு கூட்ட சகோதர, சகோதரிகள் சர்ச்சுல இருக்காங்க. வந்து பாருங்க. கூட்டுப் பிரார்த்தனைக்கு ஆண்டவர் கண்டிப்பாக பதில் கொடுப்பார். இது அத்தனைக்கும் மேலே உங்களை பண்படுத்துகிற, பக்குவப்படுத்துகின்ற, பரிசுத்தப்படுத்துகின்ற ஒரே இடம் திருச்சபை மட்டுமே. பக்தி நம்மை பண்படுத்தணும்.

இந்துக் கோயில்களிலே முன்னாடி உபன்யாசம், கதாகாலட்சேபம், பல நீதிக் கதைகள் எல்லாம் சொல்லுவாங்க. இப்போ எதுவுமே கிடையாது. நீங்க யாரு? உங்களுக்கு என்ன கஷ்டம்? என்று விசாரிக்கக் கூட யாரும் கிடையாது. உங்க பிறந்த

நாள் நட்சத்திரத்தை சொல்லி ஒரு மந்திரம், ஸ்லோகம் சொல்லிட்டா எல்லாம் சரியாயிடுமா? இந்த பக்தி நம்மை பண்படுத்தி இருக்குதா? நம்ம கிட்ட இருக்கிற பாவ எண்ணங்கள், பழக்க வழக்கங்களைப் போக்கி இருக்கிறதா? யோசிச்சுப் பாருங்கன்னு கேளுங்க. வாரா வாரம் திருச்சபை பிரசங்கத்தில் நாம் வாழ வேண்டிய வழிகளைப் போதிப்பாங்க. வேத வசனங்கள் நம்மைப் பண்படுத்தும், வழி நடத்தும், பய பக்தியை ஏற்படுத்தும். புடமிடும், பாவம் செய்யாமல் தடுத்து நிறுத்தும்.

கிறிஸ்தவம் ஒரு மதமல்ல, அது ஒரு மார்க்கம்

இந்த ஜாதி, மதம் எல்லாமே இந்த மனுஷங்க உண்டாக்கியதுதான். இவைகளை இறைவன் உண்டாக்கலை. இயேசு கிறிஸ்து ஒரு மதத் தலைவர் அல்ல. அவர் ஒரு மதத்தை ஸ்தாபிக்க பூலோகத்தில் மனித அவதாரம் எடுத்து வரலை. நம்ம பாவங்களை எல்லாம் மன்னித்து, நாம வாழ வேண்டிய வழியை போதித்து, அதுக்கு முன் உதாரணமாக் அவரே அப்படி நடந்து காட்டி, நம்மையெல்லாம் பரலோக பிரஜையாக மாத்தவும், நம்மைப் படைத்த அந்த பரமேஸ்வரனோடு இருந்த உறவை திரும்பப் பெற்றுக் கொள்ள வழிகாட்டுகிற ஒரு மார்க்கந்தான் கிறிஸ்தவம். கிறிஸ்தவம் ஒரு மதமல்ல.

நமக்கு மதம் வேண்டாம். எந்த மதமுமே வேண்டாம். கடவுளை மதத்துக்குள்ள பாக்க வேண்டாம். மதத்துக்கு அப்பாற்பட்டு பார்க்கணும். நம்மை எது பண்படுத்துமோ, எது நம்மை பரலோகம் கொண்டு போயி சேர்க்குமோ அதைத்தான் நாம நாடணும். உங்க அப்பா, அம்மா, தாத்தா பாட்டி இந்துவா இருந்ததுனால நீங்க இந்துவாக இருக்குறீங்க. அவங்க கிறிஸ்தவங்களாகவோ, முஸ்லீமாகவோ இருந்திருந்தா அப்படியே நீங்களும் இருந்திருப்பீங்க இல்லையா?

சகலத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக் கொள்

நாம பின்பற்றுகின்ற மதம், கும்பிடுகிற தெய்வம்,

வேதங்கள்தான் இந்த உலகத்திலேயே சிறந்ததுன்னு சகல மதம், தெய்வங்கள், வேதங்களை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்த பிறகா நாம இப்போது இருக்கிற மதத்தை செலக்ட் பண்ணினோம்? என்னிக்காவது நாம கும்பிடுகிற தெய்வங்கள் உண்மையிலேயே தெய்வங்கள்தானா? தெய்வத்துக்குரிய சகல நற்குணங்களும், அம்சங்களும், தகுதிகளும் அவைகளுக்கு இருக்கான்னு என்னிக்காவது செக் பண்ணிப் பார்த்து இருக்கோமா? செக் பண்ணிப் பாருங்க. ஒரு சாதாரண பொருள். வாங்க நாலு கடை ஏறி இறங்குறோம்.

நம்மையும், நம்மோட பிள்ளைகளையும், அவர்களோட எதிர்காலத்தையும் ஷேப் பண்ணுகிற மிக முக்கியமான நம்மோட மத நம்பிக்கை, கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீகக் கொள்கைகள், இவைகளை செக் பண்ணி எது நமக்குச் சிறந்ததுன்னு பாக்க வேண்டாமா? நம்ம முன்னோர்கள் ஃபாலோ பண்ணினாங்களேங்கிற ஒரே காரணத்துக்காக நாமும் அதை அப்படியே ஃபாலோ பண்றது மூட நம்பிக்கை இல்லையா? **'சகலத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'** என்று வேதம் கூறுகிறதே. **'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'**ன்னு தமிழ் மொழி கூறுகிறதே. கிறிஸ்தவத்தைத்தான் ஏற்றுக்கிட ணும்னு நான் சொல்லலை. கிறிஸ்தவத்தை நான் டக்குன்னு ஏத்துக்கிடலை. ரொம்ப அனலைஸ் பண்ணி, கம்பேர் பண்ணி, ஸ்டடி பண்ணினப் பிறகுதான் ஏத்துக்கிட்டேன்.

இம்மைக்கும் மறுமைக்கும் இயேசு மாத்திரமே

மனிதர்களை நீதியோட, நேர்மையோட, உண்மையோட, உத்தமத்தோட, அன்போட, பொறுமையோட, அடக்கத்தோட, சகிப்புத் தன்மையோட, வம்பு, வீம்பு, வைராக்கியம் இல்லாம, சொல், செயல், சிந்தனை எல்லாவற்றிலும் பரிசுத்தத்தோட வாழ வழிகாட்டுகிற ஒரு மார்க்கம், நம்மை வழிநடத்துகிற ஒரு வெளிச்சம் அது. நாம செய்கிற பாவங்களை உணர்த்தி,

அதிலிருந்து விடுபடவும், செய்த பாவங்களுக்கு விமோசனமும் தருகின்ற ஒரே தெய்வத்தை சுட்டிக் காட்டி, ஒரு ஆவிக்குரிய பரிசுத்த ஜீவியத்தை நமக்கு தருவது கிறிஸ்தவம். நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது என்று சகலத்தையும் தெளிவாகக் கூறுகின்ற வேதத்தை தருவது கிறிஸ்தவம். இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டுகின்ற வாழ்வியலை போதிக்கின்ற ஒரே கல்விக் கூடம் கிறிஸ்தவம். நான் சொல்றது சரியா தப்பான்னு பரிசுத்த வேதாகமத்தை நல்லா படித்துத் தியானிச்ச பிறகு சொல்லுங்க. நமக்கு எதுவாக இருந்தா என்னங்க?

அது இந்து மதமாக இருக்கட்டும், இல்லை இஸ்லாம், பௌத்தம், ஜைனம் அல்லது கிறிஸ்தவம் எதுவாகவோ இருக்கட்டும். அது நம்மை பண்படுத்துதா, பக்குவப்படுத்துதா, நம் எண்ணங்களை சீர்படுத்துதா, வாழ வேண்டிய வழியை போதிக்குதா, பாவத்தைக் கண்டித்து உணர்த்துதா, ஒரு பய பக்தியை உருவாக்குதான்னு பாருங்களேன். அதுதானே முக்கியம். நமக்கு எந்த மதமும் வேண்டாம். மார்க்கம், வழி போதும். நமக்கு முன் உதாரணமாக இருக்கிற ஒரு தெய்வம் போதும். நம்மை நேசிக்கிற, கைவிடாத, பாவத்தை மன்னிக்கிற, நம்மை கரை சேர்க்கின்ற ஒரு கருணை உள்ளம் கொண்ட இறைவன் போதும்.

அது என்னைப் பொறுத்தவரையில் இயேசு கிறிஸ்து ஒருத்தர் மாத்திரமே. வேற யாரும் இல்லைன்னு என்னால அழுத்தம் திருத்தமா, ஆணித்தரமா, உறுதியா சொல்லமுடியும். இதை நான் ஒரு மதவாதியாகவோ, கிறிஸ்தவனாகவோ சொல்லலை. ஒரு பகுத்தறிவாளனா, பல வேதங்களைப் படித்து அலசி ஆராய்ந்தவனா சொல்றேன். பட்டறிந்து சொல்கிறேன். மதமோ, ஆன்மிகமோ, படித்த வேதங்களோ, எதுவுமே ஆணித்தரமா எதெல்லாம் பாவம்னு சொல்லவே இல்லை. அதுதான் கொடுமை.

பரிசுத்த வேதாகமத்தின் பிரகாரம் எதெல்லாம் ஆண்டவருடைய பார்வையில பாவமா இருக்குதுன்னு பாருங்களேன்.

'விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரஹ ஆராதனை, பில்லி சூன்யம், பகை, விரோதம், வைராக்கியம், கோபம், சண்டை, பிரிவினை, மார்க்க பேதம், பொறாமை, கொலை, வெறி, களியாட்டம், பொருள் ஆசை, வம்பு, புத்தியீனமான பேச்சு, பரிகாசம், களவு, பொய்சாட்சி, துரோகம், குரோதம், வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், கோள் சொல்லுதல், அவதூறு, தேவ பகை, தேவ தூஷணம், அகந்தை, இறுமாப்பு, தற்பெருமை, மேட்டிமையான எண்ணம், வீம்பு, பொல்லாதவைகளை யோசித்தல், துன்மார்க்க சிந்தனை, பொல்லாங்கு, பெற்றோருக்கு கீழ்ப்படியாமை, அவர்களை அவமதித்நல், உணர்வு இல்லாமை, உடன் படிக்கையை மீறுதல், பொருத்தனையை செலுத்தாது இருத்தல், ஆணையிடுதல், இரக்கம் இல்லாமை, அநியாயம், சுய புணர்ச்சி, ஆண் புணர்ச்சி, ஓரினச் சேர்க்கை, திருட்டு, உதாசீனம், தீமைக்குத் தீமை செய்தல், அடுத்தவர்களிடம் குறை காணுதல், அவைகளை மன்னியாதிருத்தல், குறி கேட்டல், ஜோதிடம் பார்த்தல், நாள் பார்த்தல், அஞ்ஞனம் பார்த்தல், சகுனம் பார்த்தல், வாஸ்து பார்த்தல், ஜாதி பார்த்தல், மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, துர் இச்சை, பாலியல் இச்சை, கொடுமை, துணிகரம், நல்லோரைப் பகைத்தல், ஜீவனத்தின் பெருமை, நன்றி இல்லாமை, பரிசுத்தம் இல்லாமை, தற்பிரியம், பணப்பிரியம், சுகபோகப் பிரியம், லஞ்சம் வாங்குதல், லஞ்சம் கொடுத்தல், தேவ பக்தியின் வேஷம் தரித்தல், அவபக்தி, சத்தியத்திற்கு விரோதமாக பொய் சொல்லுதல், தேவனுடைய வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்துதல், தீய நோக்கம், உலக சிநேகிதம், போதை, மதுபானம் மற்றவர்களின் பாவங்களுக்கு உடன்படுதல். இப்படி இன்னும் எத்தனையோ விஷயங்கள் ஆண்டவரின் பார்வையில் பாவமாக இருக்கின்றன.

நான் 58 வயசு வரைக்கும் எல்லாக் கோயிலுக்கும் போனேன். இருமுடி கட்டி, விரதம் இருந்து மேல்மருவத்தூருக்கும், திருச்செந்தூருக்கும் போவேன். நிறைய மந்திர உச்சாடனங்கள் சொல்லுவேன். என்னுடைய நெற்றியிலே எப்பவுமே பளிச்சின்னு திருநீரும் குங்குமப் பொட்டும் பளிச்சிடும். வெளியரங்கமா பக்திமான். ஆனா உள்ளேயோ சாக்கடை. கோபம், தாபம்,

எரிச்சல், பழிவாங்குகிற நினைப்பு, வம்பு, வீம்பு, வைராக்கியம், காமாந்தகார சிந்தனை, அக்கிரம எண்ணங்கள், பொறாமை என்று எல்லா கெட்ட எண்ணங்களும் என்கிட்டே இருந்துச்சு. அந்த பக்தி என்னை பண்படுத்தலையே. நான் விமானப் படையில் ஒரு அதிகாரியா 26 வருஷம் இருக்கும் போது குடிப்பழக்கம் வந்துச்சு. தினமும் ரெண்டு பெக் அடிக்கலைன்னா எனக்குத் தூக்கமே வராது. விரதம் இருந்து கோயிலுக்குப் போகும் போது அந்த 10 நாள் அல்லது 15 நாள் குடிக்க மாட்டேன். கோயில்ல இருந்து திரும்பி வந்த அன்னிக்கே பாட்டிலைத் திறந்திடுவேன். தினமும் 4, 5 பாக்கெட் சிகரெட் குடிச்சேன்.

ரொம்ப நாள் பான் பராக் போட்டுக்கிட்டு இருந்தேன். அதை விடுறதுக்கு வெற்றிலை பாக்கு புகையிலை போட்டேன். இப்படி ஏதாவது ஒரு கெட்ட பழக்கம் எங்கிட்டே இருந்துக்கிட்டே இருந்துச்சு. அந்த பக்தி என்னை பண்படுத்தல. எங்கிட்ட இருந்த பாவப் பழக்க வழக்கம், எண்ணங்களிலிருந்து எனக்கு விடுதலை கொடுக்கலைங்கிறதுதான் உண்மை. என்னைப் போலத்தான் மிக அதிகமான பேர் இருக்கிறாங்க. அதுதான் நிதர்சனமான உண்மை.

'தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்ளுகிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாக இருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்துக்கு ஏதுவாக இருப்பான்.' 'சகோதரனிடத்தில் அன்பு கூறாதவன் மரணத்திலே நிலை கொண்டு இருக்கிறான். சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாக இருக்கிறான்' என்று 1 யோ 3:14, 15 சொல்லுது. **'தன் சகோதரனை அற்பமாக எண்ணுதல், அவனுக்குத் துரோகம் செய்தல், குற்றவாளி என்று தீர்த்தல், சகோதரனுடைய மனோ வியாகூலத்தைக் கண்டும் செவி கொடாமல் போகுதல்'** (ஆதி 42:21) **'அவனுக்கு இடறல் உண்டாக்குதல்'** (1 கொரி 8:11), **'உன் ஏழை சகோதரனுக்கு அவனுக்குரியவைகளை கொடாமல் மறுத்தல், உதவிகளை செய்யாதிருத்தல், அவன் மேல் வன்கண் வைத்தல்'** (உபா 15:9) **'ஒருவருக்கொருவர் விரோதமாகப் பேசுதல்'** (யாக் 4:11) எல்லாமே கொடிய பாவந்தான்.

சகோதரன் என்றால் உடன் பிறந்தவர்கள் மாத்திரமல்ல, எதிர் வீட்ல, பக்கத்து வீட்டுல, உங்க அப்பார்ட்மெண்ட்ல இருக்கிறவங்க, கூட வேலை பாக்குறவங்க, பஸ்ல, ட்ரெயின்லே கூட பயணிக்கிறவங்க எல்லாருமே சகோதர சகோதரிகள்தான். அவங்களை நீங்க மூடனேன்னு சொன்னாலே எரி நரகம் தான்னு ஆண்டவர் சொல்றார். நாக்குல நரம்பே இல்லாம எவ்வளவு கெட்ட வார்த்தைகளைப் பேசுறோம். நம்மை நம்பி வீட்டுக்கு வந்த மருமகளை கொடுமைப்படுத்துறோம், வயசான மாமியார், மாமனாரைக் குறித்து இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி குடும்பத்தை, உறவுகளைப் பிரிக்கிறோம். இப்போ சொல்லுங்க, மேலே சொல்லப்பட்ட லிஸ்ட்ல இருக்கிற பாவங்களிலே எதையுமே நாம செய்யுறது இல்லையா? **'இதுவரைக்கும் நான் எந்தப் பாவமுமே செஞ்சது இல்லைன்னு யாராவது சொன்னாங்கன்னா, அவர்கள் தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்கிறார்கள்'**னு அர்த்தம்.

பைபிள் படிச்சுக்கிட்டு சர்ச்சுக்குப் போயிட்டு வாரா வாரம் பிரசங்கத்தை கேட்டுக்கிட்டு ஏஞ்சல் டிவி, ஆசீர்வாதம் டிவீன்னு எல்லா டீ.வி.யும் பார்த்துக்கிட்டு மறுபடியும் இப்படி அக்கிரமம் செய்யுறவங்களா இருக்கத்தானே இருக்கிறோம். இல்லேன்னு சொல்ல முடியுமா?

இப்போ சொல்லுங்க, நாம பரலோகம் போக முடியுமா? நிச்சயமா போக முடியாது. ஒரே ஒரு கீழ்படியாமைக்கே எத்தனையோ ஜாம்பவான்கள் விழுந்து போனதை நாம திருஷ்டாந்தமா முன்பு பார்த்தோமே. நாம ஆண்டவரின் கட்டளையான **'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்'**கிற கட்டளைக்கு கீழ்ப்படிஞ்சிருக் கோமா? இதுவரைக்கும் எத்தனை பேரை கிறிஸ்துவுக்குள்ள வழிநடத்தி திருச்சபையில் சேர்த்திருக்கிறோம்? கொஞ்சம் நினைச்சுப் பாருங்க.

'நான் உனக்காக மரித்தேன். உனக்கு வரவேண்டிய தண்டனையை நான் என் மேலே ஏற்றுக்கிட்டு உனக்காக நான் பலியாகி உனக்கு பாவ

விரோதனைக் கொடுத்தேனே. நீ எனக்காக என்ன பண்ணியிருக்கிறாய்னு ஒரு ஆண்டவர் நம்ம கிட்டே கேட்டா நாம என்ன பதில் சொல்லப் போகிறோம். கர்த்தரோட வருகை மிக மிக சமீபமாக இருக்கப் போகுது. அவரை வெறுங்கையோட சந்திக்கப் போறோமா? கை நிறைய ஆத்துமாக்களோடேயா? இன்னிக்கே ஒரு தீர்மானம் எடுத்து அதை செயல்படுத்துங்க. ஒரு நாளைக்கு ஒருத்தர் கிட்டயாவது நான் கண்டிப்பாக சுவிசேஷத்தை சொல்லுவேன்னு ஒரு முடிவு எடுங்க.

ஆட்டோ சங்கர் பத்தி கேள்விப்பட்டு இருப்பீங்க. ஒரு சீரியல் கொலைகாரன். எத்தனையோ பேரை கொடூரமா கொலை செஞ்சு சுவத்துலேயே நிப்பாட்டி வச்சு அவங்க மேலே சிமெண்ட் வச்சு பூசி அப்படியே சுவர் சுவரா நிப்பாட்டினவன். அவன் ஒருநாள் ஒரு ஆட்டோ ஓட்டிக்கிட்டு ஒரு சிக்னல்ல நின்னுக்கிட்டு இருந்தான். ஒரு பத்து வயசுப் பொண்ணு அவன் கிட்டப் போயி, '**அங்கிள், உங்களை இயேசு நேசிக்கிறார்**'னு சொன்னா. அவனுக்கு பக்குன்னு ஆயிடுச்சு. என்ன சொன்னே? என்று திருப்பிக் கேட்டான். இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார்னு மறுபடியும் சொன்னா. என்னையா? நான் யாருன்னு உனக்கு தெரியுமா? என்று கேட்டான். எனக்குத் தெரியாது. ஆனா இயேசுவுக்கு நீங்க யாருன்னு தெரியும் என்றாள். '**நான் எவ்வளவு கொலை பண்ணியிருக்கேன் தெரியுமா உனக்கு?**' என்றான். '**நீங்க எத்தனை கொலை வேணா செய்யுங்க. செஞ்சதை இயேசப்பா கிட்ட சொல்லி கதறுங்க. அவர் உங்களை மன்னிச்சிடுவாரு. இயேசு உங்களை நேசிக்கிறார்**'னு சொல்லிட்டு ஓடிப் போயிட்டா. ஆட்டோ சங்கர் ஆடிப் போயிட்டான்.

ஆனா அந்த பொண்ணு சொன்ன அந்த வார்த்தை திரும்பத் திரும்ப அவன் காதில் ஒலிக்கிது. '**இயேசு உன்னை நேசிக்கிறார்**' என்னையா? என்னையும் நேசிப்பாரா? அவனால எதுவுமே செய்ய முடியலை. அந்த வார்த்தை அவனைப் பாடா படுத்துது. ஒரு கிறிஸ்தவன்கிட்டே இயேசு என்னை நேசிக்கிறாரா? என்று கேட்டான். அந்த கிறிஸ்தவர் வேற எதுவும் சொல்லலை. ஒரு

புதிய ஏற்பாடு பைபிளைக் கொடுத்து 'இதைப் படிச்சுப் பாருங்க'ன்னு சொல்லி கொடுத்தார். அதைப் படிச்சுப் பார்த்தான். எந்தப் பாவமும் செய்யாத அவர் மனுக் குலத்தின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்த அந்த மகத்தான தியாகத்தைப் படிச்சான். அது அவனைத் தொட்டது. அவனை மனந்திருந்த வைத்தது. தூக்கு மேடைக்கு போறதுக்கு முன்னாடி இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒரு கிறிஸ்தவனாகவே மரித்தான். ஒரு பத்து வயசுப் பொண்ணு சொன்ன ஒரு சுவிசேஷத்தால் ஒரு கிரிமினல் இரட்சிக்கப்பட்டான்.

ஒருநாளைக்கு நமக்கு 24 மணி நேரம் ஆண்டவர் கொடுத்து இருக்காரு. அதுல தூங்க, குளிக்க, சாப்பிட, டி.வி. பார்க்க என்று 12 மணி நேரம் எடுத்துக்கோங்க. மீதம் 12 மணி நேரத்தில வீட்ல, ரோட்ல, கடையில, பஜார்ல, பஸ் ஸ்டாப்புல, ரயில்வே ஸ்டேஷன்ல, வேலை பாக்குற எடத்தில, டெலிபோன்ல, செல்போன்ல எத்தனை பேரை சந்திக்கிறோம், தொடர்பு கொள்கிறோம். ஒரு நாளைக்கு ஒருத்தர் கிட்ட சுவிசேஷம் சொல்லியிருந்தாலும் ஒரு வருஷத்துல 365 பேர் கிட்ட சொல்லியிருக்கலாமே. 7 நாளைக்கு ஒருத்தர் வீதம் சொல்லியிருந்தாலும் 52 பேர் கிட்ட சொல்லியிருக்கலாமே. 30 நாளைக்கு ஒருத்தர் கிட்ட சொல்லியிருந்தாலும் 12 பேர் கிட்ட சொல்லியிருக்கலாமே. இதுவரைக்கும் எத்தனை பேர் கிட்ட இயேசுவைப் பத்தி, அவர் உங்களுக்கு செஞ்ச நன்மைகளை சாட்சியா சொல்லியிருக்கீங்க? **'இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவியுங்கள்'**கிறது தேவ கட்டளையாச்சே. கீழ் படிஞ்சிருக்கீங்களா?

பரலோகம் போகணும்கிற ஆசை மட்டும் இருக்கு. அதுக்குரியவைகளை செய்யணுமே. பரலோகம் போக இரண்டு வழியைப் பார்த்தோம். ஒரு பாதை ரொம்ப இடுக்கமானது, நெருக்கமானது, பெரிய பெரிய ஜாம்பவான்களெல்லாம் விழுந்து போயிட்டாங்கன்னு முன்னாடி ஆதாரத்தோட பார்த்தோம். அப்பேர்ப்பட்ட தேவ மனுஷர்களுக்கே அந்த கதி. நாம எந்த

நிலையில இருக்கோம்? சரி... இன்னொரு வழி தேவ சித்தம் செய்தல். அதாவது அவருக்கு ஊழியம் செய்தல். அதையும் இதுவரை செய்யலை.

பிறகு எப்படீங்க நீங்க பரலோகம் போக முடியும்? சான்சே இல்லே. சரி விடுங்க. இதுவரைக்கும் எப்படியோ இருந்துட்டோம். ஆண்டவரோட வருகை ரொம்ப சமீபமா இருக்குது. எப்ப வேணா அவரோட வருகை இருக்கலாம். அதுக்குள்ளயாவது நாம நம்மை பரலோகம் செல்லத் தகுதியுடைய ஒரு பாத்திரமா ஆக்கிக் கொள்ள வேண்டாமா? சொல்லுங்க. சுவிசேஷத்தை அறிவிக்கிறதுல அப்படி என்ன கஷ்டங்க உங்களுக்கு? 71 வயசுல நான் மாசம் 20 நாளைக்கு மேல ஓடிக்கிட்டு இருக்கேன். பல எதிர்ப்புகள் எனக்கு இருக்கத்தான் செய்யுது. கொலை மிரட்டல் லெட்டர் கூட வருது. எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்களுக்கு என்னை இழுத்துட்டுப் போயிருக்காங்க. கோர்ட்ல கேஸ் போட்டிருக்காங்க. நான் எதைப் பத்தியும் கவலைப்படல. வாழ்ந்தா ஆண்டவருக்காக வாழ்வோம். சாகறதா இருந்தாலும் அவருக்காக சாவோம்னு ஓடிக்கிட்டு இருக்கேன்.

எங்கோ பிறந்து வளர்ந்த ஒரு வில்லியம் கேரிக்கு நம்ம தேசத்தின் மேல் அக்கறை இருந்தது. மனைவி, புள்ளை குட்டி எல்லாமே இறந்தாங்க. இருந்தாலும் தொடர்ந்து ஊழியம் செஞ்சாரு. ஒரு சீகன்பால்க் நம் தேசத்துக்கு வரலைன்னா நமக்கு தமிழ் பைபிள் கிடைச்சிருக்குமா? ஆஸ்திரேலியாவில பிறந்த கிரஹாம் ஸ்டேன்ஸும் அவரோட ரெண்டு பச்சிளம் பாலகர்களும் உயிரோட எரிச்சுக் கொல்லப்பட்டாங்க. அதுக்கப்புறமும் கிரஹாம் ஸ்டேன்ஸோட மனைவி இங்கிருக்கிற குஷ்டரோஹிகள் மத்தியில ஊழியம் பண்ணினாங்களே. எங்கயோ பிறந்து வாழ்ந்த மதர் திரேசாவுக்கு நம்ம நாட்டு ஏழை பாளைங்க, அநாதைக் குழந்தைகள் மேல அவ்வளவு அக்கறை. இராத்திரிப் பகலா அவங்களுக்காக பாடுபட்டாங்க. ஆனா நாம? எதிர்வீட்டு, பக்கத்து வீட்டுக்காரங்களை அங்கிள், ஆண்ட்டி, சித்தப்பா, பெரியப்பா, அண்ணன், தம்பின்னு கூப்பிட்டு உறவு

கொண்டாடுறோம். அவங்க நம்ம கண்ணுக்கு முன்னாடியே செத்து சுண்ணாம்பாகி பாடை பாடையா நரகத்துக்குப் போறாங்க. அந்த ரத்தப் பழி யார் மேலே விழும்? நம்ம மேலதானே?

ஆண்டவர் கூட பரத்தில் இருக்கிற நித்ய ஜீவன் வேணுமா? இல்லை தேவ சித்தம் செய்யாத, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படியாத ஒரு விசுவாசியா நியாயத் தீர்ப்புல அவருக்கு முன்னாடி வெறுங்கையோட நிக்கப் போறீங்களா? இன்னிக்கு ஒரு முடிவு எடுங்க. சுவிசேஷத்தை எளிதாச் சொல்றதுக்கு வேணுங்கிற எல்லா வழிமுறைகளையும் இதுல எழுதியிருக்கேன். இன்னும் ஏதாவது சந்தேகம்னா எனக்கு போன் பண்ணுங்க. இல்ல கடிதம் எழுதுங்க. நான் எழுதிய புத்தகங்களை, விசிடிக்களை மாசா மாசம் நீங்க வாங்கி அடுத்தவங்களுக்கு ஜெபத்தோட கொடுத்தாலே போதும். அதன் மூலம் நிறையப் பேர் இரட்சிக்கப்படுறாங்கன்னு அனுதினமும் லெட்டர் வருது. நீங்களும் செய்யுங்க. பரலோக பிரஜையா மாறுங்க. கர்த்தரின் கரம் உங்களோடு இருந்து வழிநடத்துவதாக!

ஆண்டவருக்கு ஊழியம் செய்யுறவங்க எப்படி இருக்கணும்னு ஒரு கட்டளையை இப்புத்தகத்தின் கடைசியில **Appandix 'B'** யாக இணைத்துள்ளேன். படிச்சுப் பார்த்து அதன்படி நடங்க. சுவிசேஷத்தை அறிவிக்கிற ஒவ்வொருத்தரையும் கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

தேசம் சந்திக்கப்படவும்,
நமது தேசம் ஒரு கிறிஸ்த நாடாக மாறவும்
பாரப்பட்டு முழங்கால் யுத்தம் செய்யும்
உங்கள் சகோதரன்
எஸ்.தாயப்பன்

Appandix 'A'

இந்துக்களுக்கு கொடுப்பதற்கு ஏதுவான புத்தகம் / சி.டிக்கள்

வ. எண்.	புத்தகம்/ சிடியின் பெயர்	மொழி	பிரதிகள் விநியோகத்தில்
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	தமிழ்	3,05,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	கன்னடம்	40,000
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	தெலுங்கு	30,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	மலையாளம்	40,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்VCD	தமிழ்	3,10,000
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் VCD	கன்னடம்	40,000
7.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் VCD	இந்தி	30,000
8.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் VCD	மலையாளம்	5,000
9.	Mycry & Joyful New Life	ஆங்கிலம்	45,000
10.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	தமிழ்	1,05,000
11.	உண்மையான கடவுள் யார்?	தமிழ்	20,000
12.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்	தமிழ்	30,000
13.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும் - VCD	தமிழ்	20,000
14.	முக்திக்கு வழி கிறிஸ்தவமே - VCD	தமிழ்	20,000
15.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து - Part I	தமிழ்	10,000
16.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து - Part II	தமிழ்	10,000
17.	கிறிஸ்தவத்தைக் குறித்து இந்துக்களின் கேள்விக்கு பதில் - Part I	தமிழ்	10,000
18.	கிறிஸ்தவத்தைக் குறித்து இந்துக்களின் கேள்விக்கு பதில் - Part II	தமிழ்	10,000
19.	அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு	தமிழ்	10,000
20.	தெய்வீக சுகம் உண்டா?	தமிழ்	10,000
21.	நீங்களே எனக்கு சாட்சிகள்	தமிழ்	25,000
22.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	தமிழ்	25,000
23.	விவிலியமும் விஞ்ஞானமும்	தமிழ்	10,000

24.	[illegible] - Part I	தமிழ்	10,000
25.	[illegible] - Part II	தமிழ்	10,000
26.	[illegible]	தமிழ்	10,000
27.	[illegible] - Part I	தமிழ்	5,000
28.	[illegible] - Part II	தமிழ்	5,000
29.	[illegible] ([illegible])	தமிழ்	20,000 (ரூ.1)
30.	[illegible]	தமிழ்	5,000
31.	[illegible]	தமிழ்	5,000
32.	[illegible]	தமிழ்	5,000

Appandix 'B'

தேசத்தின் எழுப்புதலுக்காக தேவன் தேடும் மனிதனின் தன்மைகள்

1. ஜெபம் அவனது சுவாசமாக இருக்க வேண்டும்.
2. ஆத்தும தாகம் அவனுக்குள் இயற்கையாகவே இருக்க வேண்டும்.
3. தேவனுடைய பிரசன்னம் அனுபவமாய் இருக்க வேண்டும்.
4. கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவன் சோம்பேறியாய் இருக்கக் கூடாது.
5. கர்த்தருக்காகப் பாடுகள் வந்தாலும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
6. உலகம் அவனுக்கு வனாந்தரமாக இருக்க வேண்டும்.
7. சொகுசு வாழ்க்கை அவனுக்கு குப்பையாக இருக்க வேண்டும்.
8. நேர்மை அவனது உடன்பிறந்ததாக இருக்க வேண்டும்.
9. மாய்மாலம் அவனுக்கு அருவருப்பாக இருக்க வேண்டும்.
10. பாவம் அவனுக்குக் கசப்பாக இருக்க வேண்டும்.
11. மன்னிக்கும் சுபாவம் நண்பனாக இருக்க வேண்டும்.
12. வேதத்தை அவன் அடிக்கடி தியானிக்க வேண்டும்.
13. தேவனை துதிப்பது அவன் இரகசியமாக இருக்க வேண்டும்.
14. ஆவியின் அபிஷேகத்தில் நிறைவாக இருக்க வேண்டும்.
15. பாவத்தைக் கண்டித்து உணர்த்துவதில் தீர்க்கதரிசியாய் இருக்க வேண்டும்.
16. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேரென்று அறிந்திருக்க வேண்டும்.

17. ஜாதி பிசாசு, சபை பாகுபாடு அவனுக்கு வாந்தியாக இருக்க வேண்டும்.
18. அன்பு அவன் வாழ்வில் மையமாக இருக்க வேண்டும்.
19. பிரசங்கிப்பதில் அவன் அழைப்பை உணர்ந்திருக்க வேண்டும்.
20. உபவாசம் உயிர்த்தோழனாய் இருக்க வேண்டும்.
21. தேவ சித்தம் செய்ய ஜெபிப்பவனாய் இருக்க வேண்டும்.
22. அவன் ஆகாரப் பிரியனாய் இருக்கக் கூடாது.
23. பணத்திற்காகவோ, புகழுக்காகவோ ஊழியம் செய்யக் கூடாது.
24. பரிசுத்தத்திற்கு அவன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
25. பரலோகம் அவன் ஆஸ்தியாக இருக்க வேண்டும்.

''அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்'' (பிலிப். 3:11). இந்தியாவின் எழுப்புதலுக்காக இப்படிப்பட்ட அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் தேவை. பரலோக அக்கினியைப் பெற்ற எலியாக்கள் தேவை. தேவனுக்காக எதையும் இழக்கக் கூடிய பவுல்கள் தேவை. தேவ இராஜ்ஜியத்திற்காக அழுது ஜெபிக்கும் நெகேமியாக்கள் சேனையாக தேவை. பரிசுத்தமும், பக்தி வைராக்கியமும் கொண்ட தானியேல்கள் தேவை. அழியும் ஜனங்களை மீட்க, உபவாசித்துப் போராடும் மொர்தெகாய்கள் தேவை. தேவ ஊழியத்தில் தூண்களாய் நிற்க, உண்மையுள்ள வாலிப தீமோத்தேயுக்கள் தேவை - (எரேமியா 48:10).

நாம் இவர்களில் ஒருவராக மாறுவோமா? அப்படி மாற ஆவியானவர் உங்களுக்கு உதவுவாராக!

- உங்கள் சகோதரன்

★

ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 71 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 2500க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777